உ

சிவமயம்



அமரர்

# கணபதிப்பிள்ளை பொன்னுச்சாமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

24.02.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் வடமராட்சி கரணவாய் தெற்கை
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

# கணபதிப்பிள்ளை பொன்னுச்சாமி

அவர்களின் அந்தியேட்டி

# நினைவு மலர்

24.02.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து"
வானுறையும் தெய்வத்தினுள்
ஒன்றாகக் கலந்து விட்ட
எங்கள் அன்புத் தந்தை
அமரர் கணபதிப்பிள்ளை பொன்னுச்சாமி
அவர்களின் பாதார விந்தங்களிற்கு
இவ் அமரத்துவ நினைவஞ்சலி
மலரை ஆறாத் துயருடன் கண்ணீர்ப்
பூச் செறிந்து அஞ்சலி செய்து
சமர்ப்பிக்கின்றோம்

– காணிக்கை –
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு
1934.09.08

உதிர்வு
2017.01.25

# அமரர் கணபதிப்பிள்ளை பொன்னுச்சாமி

## திதி நிர்ணய வெண்பா

சீராளும் துர்முகியின் சிறப்புநிறை தையதனில்
நேராளும் அபரத்திர யோதசியே – பேராளும்
கணபதிப்பிள்ளை பொன்னுச்சாமி கீர்த்திமிகு சந்நிதியான்
இணையடி சேர் நாளென் றியம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப்பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## பஞ்ச தோத்திரங்கள்

### தேவாரம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணித் திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிட மாக
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுது மே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதுதற் கரியவன்
நிலவுலா விய நீர்மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்ச் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் .

## வாழ்த்து

வான்முகில் வழாஅதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைவிழைப்பா

வான்நிலவு விளக்கேற்ற வண்ணமலர் அழகுமிழ
வாய்மணக்கத் தமிழ்பேசும் நாடு
தேன்நிகர்த்த மாவலியாள் தென்றல்தலை சீவிவர
தென்பாங்கில் கடல்தழுவும் நாடு
மான்விழியார் மஞ்ஞையென மயல்பேசி நடைபழக
வயமிழக்கும் மறவர்வள நாடு
'நான்' என்று ஆளவந்தோர் நாம்என்று திமிர்தணிந்து
நாவடக்கி வாழ்கின்ற நாடு

பொழிகின்ற வானம் போதுமென்ற மண்வளம்
போதவிழ்ந்து குலுங்குகின்ற பூவனம்
அழிகின்ற பேதம் அரவணைக்கும் வேதம்
அறிஞர்தம் நாவிலே அரன்நாமம்
தெளிகின்ற இளமை தேர்ந்தெடுக்கும் புதுமை
தேனமுதம் எனவுயிர்க்கும் தமிழ்ப்பெருமை
ஒழிகின்ற பொய்ம்மை ஓங்கிவரும் வாய்மை
உள்மனதில் கிளர்ந்தொளிரும் உண்மை

கடலாடி வாழ்வளிக்கும் காளையர்கள் ஓர்புறமாம்
கவின்தொழில்கள் செய்பவர்கள் ஓர்புறமாம்
திடமாக நிலமுழுது செந்நெல்லால் மலையமைத்து
செல்வந் தருமிளைஞர் ஓர்புறமாம்
உடலாலும் மனதாலும் ஒழுக்கநெறி ஓம்பிநிற்கும்
ஒப்பற்ற மெய்த்தமிழர் ஓர்புறமாம்
நடமாடுந் தெய்வங்கள் போற்சான்றோர் ஓர்புறமாம்
நல்லசிவ பூமியிங்கே வாழ்வதுவே பேரறமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண நிகழ்வின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு மலரின் பயணம் நிறைவுறுகிறது...



உலகம் ஒரு பூந்தோட்டம்.

அதன் சொந்தக்காரன் இறைவன்.

அவன் உரமிடுகிறான்: செடி வைக்கிறான்: விருப்பமான வகையில் பூக்களையும் மலரச் செய்கிறான்.

சில மலர்கள் மணம் தருகின்றன: சில மலர்கள் அழகைச் சொரிகின்றன.

சில மலர்களோ அழகுடன் மணத்தையும் உமிழ்கின்றன: அது இறைவனின் விருப்பம்.

எதுவாயினும் மலரின் ஆயுட்காலம் ஏறத்தாழ ஒருநாள் தானே!

ஒருநாள் என்று வருத்தப்படுவதும், இருபத்துநான்கு மணித்துளிகள் என்று பூரித்துப் போவதும், ஆயிரத்துச் சொச்சம் நிமிடத்துளிகள் என அலுத்துக் கொள்வதும் மலர்களின் உரிமை.

தோட்டக்காரன் விரும்பும்போது மலரைப் பறித்து விடலாம். யாரும் மறுத்துப் பேச முடியாது. அதுதானே நியதி...?

அரும்பு தெரிந்தவுடன் அடுத்துள்ள பூக்கள் ஆரவாரத்துடன் குதூகலிக்கின்றன: புதிய அரும்பு தாங்கள் பூத்த மரத்திலேயே தோன்றியதால் அது தங்கள் உறவென்று உள்ளம் பூரித்துப் போகின்றன: தம் வம்சத்தின் வளர்பிறை எனக் கொண்டாடுகின்றன.

அதனைப் பாதுகாக்கின்றன: சீராட்டுகின்றன:தாலாட்டுகின்றன: பெயர்கூடச் சூட்டுகின்றன: விழாக்கள் வைத்துப் பூரிக்கின்றன.

எனினும், தோட்டத்தின் எந்தப் பூவும் எந்த நேரத்திலும் வீழ்ந்து போகலாம். காற்றடித்துக் கரைந்து விடலாம். வண்டு ஊதி வதங்கியும் போகலாம்.

இறைவன் பறித்துக் கொள்ளும் மலர்கள் அதிகஷ்டமானவை. அவன் விரும்பியல்லவா பறித்துக் கொள்கிறான்? அழகில் - மணத்தில் - மயங்கியல்லவா தன்வயம் ஈர்த்துக் கொள்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஈர்ப்பு இரண்டொரு மணித் துளிகளிலேயும் நிகழலாம்: இருபது மணிநேரம் ஆனபின்னும் நேரலாம்.

இளமை என்பதும் நடுத்தரம் என்பதும் முதுமை என்பதும் மணித்துளிகளின் கணக்குத்தானே!

விருப்பு வெறுப்பு அற்ற இறைவனே விரும்பி ஏற்கும் பூக்களின் அதிகூஷ்டத்தை என்னவென்பது?

இறைவன் திருப்பாதங்களை அடைந்த பூக்கள் மீண்டும் செடிகளில் வடிவம் எடுக்கப் போவதில்லை.

இதைத்தான் இந்துமதம் சொல்கிறது: இறப்பின்பின் எல்லா உயிர்களுக்கும் சொர்க்கமோ நரகமோ இருக்கத்தான் செய்கின்றன: ஆனால் சில உயிர்களுக்கே இறைவனின் திருவடி நிழல் கிடைக்கின்றது. இதைத்தான் முத்தி என்கிறது.

சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ செல்கின்ற மலர்கள் மீண்டும் வடிவமெடுக்கின்றன. வினைப்பயன் தீர்ந்ததும் திரும்பி வரவேண்டிய நிலை அவற்றுக்கு.

ஆனால். முத்தி கிடைப்பவை மீண்டும் உலகுக்கு வரப்போவதில்லை. அவை இறையோடு ஐக்கியப்பட்டு விடுகின்றன. முழுமையுற்று விடுகின்றன.

உயிர்கள் எப்படி இறையுடன் கலக்கலாம்: இறைவனே ஆகலாம் எனப் புத்தியைக் கசக்கிக் கொள்பவர்களும் இந்த உலகில் இல்லாமலில்லை.

இறைவன் மிகப் பெரியவன். உயிர்களோ அற்பமானவை என்பது அவர்களது எண்ணம்.

ஆனால் இந்துக்களுடைய எண்ணம் அவ்வாறன்று.

ஒரு நீர்த்திவலையில் ஐதரசனும் ஒட்சிசனும் என்ன பங்கு இருக்கிறதோ அந்தப் பங்குதானே கடலிலும்இருக்கிறது.

கடல் முழுமையென்றால் நீர்த்திவலையும் முழுமைதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் பெரியவன் என்றும் உயிர்கள் அவனுக்குப் பயந்து அந்நியப்பட்டு நிற்பவை என்றும் எந்த இந்து சாஸ்திரமும் சொல்லியதில்லை.

அதனால்தான் இந்துசாஸ்திரங்களில் இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு இனிமையாக இருக்கிறது: உரிமையாகப் பரிணமிக்கிறது.

வந்திக்குக் கூலி, சுந்தரருக்கத் தோழன், ஔவைக்குப் பேரன், பாரதிக்கு வேலைக்காரன், சம்பந்தருக்குப் பெற்றோர், ஆண்டாளுக்குக் காதலன்.

அடிமுடி தேடிய தேவர்களுக்குக் கட்டுப்படாதவன், அறிவிற் குறைந்த வேடன் கண்ணப்பனின் காலடிக்குள் சிக்குண்டு போகவில்லையா?

அன்பு, கைம்மாறு கருதாத பக்தி.... இவைதாம் இறைவனுடன் உயிர்களைச் சேர்ப்பிக்கின்ற சாதனங்கள்.

நதிகள் கடலைத் தேடுவதும், துளிகள் நதியைக் கூடுவதும் இயல்பானது போல் கடலைச் சேர்ந்த நீர்த்திவலைகள் கடலாகிப் போவதும் இயல்பானவைதாம்.

அன்பு வாய்க்காலாகி, தூயபக்தி சிற்றாறாகி, விருப்பு வெறுப்பற்ற கடமை பேராறாகி உயிர்கள் இறைவன் என்ற கடலில் கலந்து இறையாகிப் போவதும் இயற்கையின் நியதிதான்.

**இப்படி இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு திவ்விய மலர்தான் கணபதிப்பிள்ளை பொன்னுச்சாமி.**
**இந்த மலர் இனிமேல் உலகத்துக்கு வரப்போவதில்லை. இலக்கை அடைந்துவிட்ட மலரல்லவா அது.**
**அதன் பயணம் நிறைவு பெற்றுவிட்டது.**

இலக்கை எய்தும் இறுதி நிலையில்தான் அது உலகுக்கு வந்திருந்தது.

மலரின் இறுதி வருகை அமைந்த நாள் **1934 செப்டெம்பர் எட்டாம் நாளாக** இருந்தது.

தந்தையார் **கணபதிப்பிள்ளை**: தாயார் **சின்னாச்சிப்பிள்ளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ். வடமராட்சி கரணவாய்**க் கிராமத்தில் பயிரை நம்பி வாழ்ந்திருந்த குடும்பத்தின் நான்காவது உயிராய் அவதரித்தது அந்த மலர்.

சைவமும் தமிழும் குதூகலிக்கும் குடும்பம் அது.

நெஞ்சில் சிவனும் நெற்றியில் நீறும் ஓசையில் சிவநாமமும் அந்தக் குடும்பத்தின் பரம்பரைச் சொத்து.

ஏற்கனவே அந்தக் குடும்பம் மூன்று மலர்களைத் தாங்கிய நிலையில் களிப்புற்று இருந்தது.

**வள்ளியம்மை, கந்தசாமி, இராசம்மா** அவற்றின் பெயர்களாக அமைந்திருந்தன.

**பொன்னுச்சாமி** நான்காவது மலராயிற்று.

புதிய மலரைக் கண்டதும் ஏற்கனவே பூத்திருந்த மலர்கள் களிப்பால் பூரித்துப் போயின. தம்பி, தம்பி என்று அணைத்து முத்தமிட்டன.

தம்பியின் கண்களில் ஒருதுளி நீர்தானும் கவலை காரணமாக வந்துவிடக் கூடாது என்பதில் அக்கறை காட்டின.

நால்வராகக் கொண்டாடிய பூங்கொத்தில் இப்போது புதிய இரு அரும்புகளும் இணைந்து கொண்டன.அவற்றின் பெயர்கள் **நாகலிங்கம், பரமசாமி** எனவாயின.

ஆறு மலர்கள் கொண்ட பூச்செண்டு. அதன் பாதுகாவலர்களாகப் பாசமுள்ள தாய்தந்தையர். சந்தோஷத்துக்குக் கேட்கவா வேண்டும்.

பாசமும் பக்குவமும், நேசமும் நேர்மையும் சிறு மலர்களிடையே கூடத் தண்டவமாடின. அண்ணாவின் அரவணைப்பில் - அக்காமாரின் அன்புப் பிணைப்பில் - தம்பியரின் பாச இணைப்பில் நேரிய பாதையில் நடைபோட்டது அந்த மலர்.

உடன்பிறப்புகளுடன் ஆடியது: விளையாடியது: சொர்க்கத்தை இந்த மண்ணிலேயே கண்டு வியந்தது. பெற்றோரின் அரவணைப்பில் தன்னையே மறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா, அக்காமாரின் வழியிலேயே பாடசாலைக்கும் நடைபோட்டது. **கரணவாய் மகாவித்தியாலயம்** என இன்று அழைக்கப்படுகின்ற பள்ளியே அனைவருக்கும் ஆரம்பக்கல்வியைத் தந்தது. தம்பியருக்கும் எழுத்தறிவித்தது.

ஊரார் போற்ற, நண்பர்கள் ஏற்ற, உறவினர் மகிழ, உடன்பிறப்புகள் பெருமை கொள்ள, பெற்றோர் உவகையுற பெரும் பேறிவரென அனைவரும் வாழ்த்தும் வண்ணம் அலர்ந்தது அந்த மலர்.

பொன்னுச்சாமி என்ற பெயர்ப்பொருத்தத்தின் சீர்மை அந்த மலரின் நடத்தைக் கோலங்களில் நடமிட்டதால் சான்றோனாயினன் தம்பிள்ளை என்பதில் பெற்றோருக்கு உளப்பூரிப்பு.

சிறுவயதில் தானாகக் கண்டிக்குச் சென்று வியாபாரம் பழகிவந்த மலர் காளையானது: காண்போர் கருத்தைக் கவரும் வீரனானது.

**அந்த மலருக்குக் கணபதிப்பிள்ளையார் பொருத்தமான துணை தேர்ந்தார். மனையாள் சின்னாச்சிப்பிள்ளையும் சிந்தை நிறைந்தார்.**

**மட்டுவில் நாகமணி முத்தாச்சி இணையின் முன்றாவது மகள் செல்லம்மா பொருந்திவந்தார். இருதரப்பும் மனமொத்தனர். தங்க்ராணி எனச் செல்லமாக அழைக்கப்பட்ட செல்லம்மா பொன்னுச்சாமி என்ற இனிய மலரின் சுகந்தமானார்.**

**இது நடந்தது 1958 செப்தெம்பர் 08ஆந் திகதி.**

**அந்த நாள் மலரின் 24ஆவது அகவை நிறைவாகவும் அமைந்திருந்தது.**

சுற்றம் வாழ்த்த, சொந்தம் போற்ற, கற்றோர் மகிழ, பெற்றோர் நெகிழ பொன்னுச்சாமி — செல்லம்மா இணை வாழ்க்கைப் பயணத்தில் சுகந்தம் வீசியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் அமர்ந்தாறினர்: விருந்துகள் வந்தாறினர்: சுற்றங்கள் மகிழ்ந்தாறினர்.

வந்தாரை வரவேற்கும் பண்பு, செல்விருந்தோம்பி வருவிருந்தேற்கும் சிறப்பு அந்தக் குடும்பத்துக்கே உரித்தாயின.

இதயங் கலந்த இனிய வாழ்க்கைப் பேறாய்ப் புதுமலர்கள் அரும்பின.

**யசோதா, வனிதா, சத்தியமூர்த்தி, நிர்மலா, சீதா, சத்தியலிங்கம், லதா** என அவை ஏழு வண்ணாங்காளாகி அழகுமிழ்ந்தன.

அந்த வண்ணாங்களுடன் கல்வி இணைந்தது: கண்ணியம் வளர்ந்தது: காண்போர் பெருமைப்படும் பண்பாடும் சேர்ந்தது.

தந்தைவழி நேர்மையும் தாய்வழிப் பொறுமையும் அவற்றின் சொத்தாயின.

**வியாபாரம், இ.போ.ச. பேருந்துச் சாரதி, தோட்டமிடல்** என நேர்வழித் தொழில்களில் மலர் பணம் சம்பாதித்தது. உரிமையில்லாத பணத்தையோ, ஊழல்வழிப் பொருளையோ அது தொடமறுத்தது.

நேர்மையுடன் உழைக்கும் பணத்தில்தான் தன் பெண்டு, பிள்ளைகளுக்கு உணவிட வேண்டும்: உரமிட வேண்டும் என்ற கொள்கை அந்த மலருக்கு. மலர் பெற்றெடுத்த வண்ணாங்கள் வளர்ந்தன: சிறந்தன. மலர் தன் சுகந்த மனையாளுடன் தாம் பெற்ற வண்ணாங்களுக்கு உரிய துணை தேடத் தொடங்கியது.

மூத்தமகள் யசோதாவுக்குக் **குணரத்தினம்**, அடுத்து வனிதாவுக்கு அக்கா இராசம்மாவின் மகன் **திசைவீரசிங்கம்,** சத்தியமூர்த்திக்கு **வாசுகி,** நிர்மலாவுக்கு தன்மனையாளின் அண்ணன் மகன் **அருந்தவரத்தினம்,** சீதாவுக்கு **தவராஜ்,** சத்தியலிங்கத்துக்கு **வாசுகி,** லதாவுக்கு **மணிவண்ணன்** என ஏழு வண்ணாங்களுக்கும் பொருத்தமான இணைகளைத் தேர்ந்து வாழவைத்தார்.

வண்ணாங்களின் எண்ணாங்களாக, யசோதா – குணரத்தினம் வழியில் **ராஜ்குமார், திலிப்குமார், தினேஸ்குமார், மைதிலி,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனிதா – திசைவீரசிங்கம் இணையூடாக **நீலன், நிஷாந்தன், நீலுஜா,**

சத்தியமூர்த்தி – வாசுகி வாழ்வின் சான்றாக **சஞ்சய்குமார், சங்கீதன்,**

நிர்மலா – அருந்தவரத்தினம் தந்த அரும்புகளாக **அபிராமி, அரவிந்தன், அசோக்,**

சீதா – தவராசா சிறப்பின் அடையாளங்களாக **லக்சிதா, பிருந்திகா, கிருத்திகா,**

சத்தியலிங்கம் - வாசுகியின் வண்ணங்களாக **பவன்,பாரதி,**

லதா – மணிவண்ணன் வாரிசுகளாக **சௌமியா, சைதன்யன், ஸ்ரீராம்** எனப் பேரப்பிள்ளைகள் மலரைச் சுற்றி வட்டமிடத் தொடங்கின.

தனிமலர் - ஆறு பூக்கள் கொண்ட செண்டின் நான்காவது மலர் - இப்போது தனித் தோட்டமாகவே மாறிவிட்டது.

இம்மலர் பூட்டப்பிள்ளைகளான சோலை, சென்னி, கௌதம், ஆரணி கண்டு மகிழ்ந்தது.

வாழ்வின் ஏற்ற இறக்கங்களைக் கண்டு... எதிர்நீச்சல் போட்டு வென்று... ஆயிரம்பிறை பார்த்து...

உற்றார் கடமைகளைப் பேணி... உரியார்க்கு உரித்தான உதவிகளை யாற்றி... பிள்ளைகளைச் சமுதாய அரங்கில் முன்னிலையில் வைத்து...

பெற்றோர்க்கு நல்லமகவாய், உடன்பிறப்புகளுக்கு நல்ல சகோதரனாய், மனைவிக்கு இனியதுணையாய், மக்களுக்கு வல்லதந்தையாய், மருகர்களுக்கு பொறுப்பார்ந்த மாமனாய், பேரக்குழந்தைகளுக்கும் பூட்டப்பிள்ளைகளுக்கும் விளையாடுங் குழந்தையாய் வாழ்ந்து மணம்பரப்பிய மலர்...

சிறந்த நண்பனாக வாழ்ந்தது: சிறந்த உறவுக்காரனாக வாழ்ந்தது: சிறந்த சமூகத் தொண்டனாக வாழ்ந்தது.

இம்மலர் ஓய்வுகாலத்தில் தன் மனையாளுடன் வெளியூரில் (லண்டன், கனடா, டென்மார்க், பிரான்ஸ், இந்தியா) பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் இன்புற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரின் உலகப்பயணம் போதுமென்றானது. ஆயிரம் பிறை கண்ட நிறைவு அதற்கு... ஆனபணிகளை நெறிப்பட நிறைவேற்றினோம் என்ற திருப்தி அதற்கு...

உடனிருந்த மனையாளை மட்டும் மனத்திருத்தி. ஏனைய பாசங்களை மெல்ல மெல்ல இழந்தது அந்த மலர். ஆற்றங்கரையானையும், நுணுப்பாவளைக் கந்தனையும், கருப்பையடி அம்மனையும் எண்ணிக்கொண்டது.

பணி நிறைவடைந்தால் பயணம் முடிவுறுவதுதானே இயற்கை?

அந்த மலரின் பயணம் நிறைவுற்றது. உலகச் சுழலிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது. இறைவன் திருவடி மலராகத் தன்னை மாற்றிக் கொண்டது.

அந்தநாள் **2017 ஜனவரி 25ஆந் திகதி புதன்கிழமை** என்றது ஆங்கிலக் கணிப்பு.

**துர்முகி ஆண்டு தை 12ஆம் நாள்** என்கிறது தமிழ்கணிப்பு.
சொந்தங்கள் அழுதன: சுற்றங்கள் நெகிழ்ந்தன: பிள்ளைகள் கதறினர்: மனையாள் மனம் பதைபதைத்தது.

அழுதென்ன, அரற்றியென்ன... ஆகப்போவது எதுவுமில்லை. பணிமுடித்த மலரை வழியனுப்பி வைப்பதொன்றே நாம் செய்யக் கூடிய கருமம்.

நிறைவான ஆன்மா இறைவனடி சேர்ந்து விட்டது. அழ வேண்டியதில்லை. அரனுக்கு நாம் இடுகின்ற பூ அந்த ஆன்மாவையுஞ் சேரப் பிரார்த்திப்போமாக.

**"வாழ்வாங்கு வாழ்ந்தார்: வானுறையும் தெய்வத்துள் கரைந்தார்"**

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50$^{வது}$ திருமண ஆண்டு நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி துயரம்...

சிந்தையிலே பூப்போட்டு தினந்தினமும் மகிழ்ந்திருந்தேன்
சிறியதொரு தேர்கட்டி வடம்பூட்டி இழுத்துவந்தேன்
முந்தையிலே செய்தவத்தால் முகிழ்த்தவாழ்வு என்றிருந்தேன்
முற்றத்து மல்லிகையாய் வீடெங்கும் மணந்திருந்தேன்
எந்தையிலா குறைபோக்கும்என்ன வராய்க்கண்டிருந்தேன்
என்நோவைத் தன்நோவாய் ஏற்றதுணை யென்றிருந்தேன்
வந்தவந்தக் காலனுன்னைக் காவு கொள்ளப் பார்த்திருந்தேன்
வழியற்ற பாவியாய் இன்றேங்கி நிற்கலானேன்!

கவிதைசொல்லி கதைகள்சொல்லி காதல்சொல்லி வாழ்ந்தார்
கருத்துடனே வாய்த்த நல்ல கணவரெனத் திகழ்ந்தார்
சிவிகையமர் மகிழ்வினிலே எனைத்திளைக்க வைத்தார்
சிந்தையெலாந் தமிழ்மணக்கும் சிறந்த வாழ்வு தந்தார்
புவிதனிலே பலர்போற்ற பெருமைகொள்ளச் செய்தார்
புத்திரரைச் சிறக்கவைத்து என்மனதை வென்றார்
அவமாகி நொந்தழுது அல்லலுற எனைவிட்டு
ஐயன்இன்று சென்றதனால் அலமந்தேன் நானே!

## பிள்ளைகள் துயரம்...

தந்தையாய் தோழனாய் தமிழ்சொன்ன ஆசானாய்
தரணியிலே எமைக்காத்து நின்ற அப்பா
சிந்தையிலே இறைநாமம் செய்கையிலே நேர்மையென
செவ்வழியைக் காட்டியெமை வளர்த்த அப்பா
முந்தையர்தம் பண்பாடு மூத்ததமிழ் வரலாறு
முற்றுணர்ந்து எமக்குணர்த்தி வைத்த அப்பா
நொந்தின்று வாடுகின்றோம் நொய்ந்நூலாய்த் துவள்கின்றோம்
நெடுந்தூரம் எமைவிட்டுச் சென்றீர் அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயர்சுமந்து புயல்கடந்து திடமனத்த ராய்நின்று
துளிர்களெமை விருட்சமென வளர்த்த அப்பா
மயல்கொண்டு நாம்உயரக் கல்விதனை ஊட்டி
மகிழ்ச்சியுடன் வாழவழி வகுத்த அப்பா
வெயில்மறந்து வசந்தமென வாழ்வுயரும் போது
விண்ணகந்தான் ஏகிவிட்ட தேனோ அப்பா?
செயல்மறந்தோம் உனைத்தாங்கும் திறனிழந்தோம் சேய்நாம்
செய்வதறி யாதுலகில் திகைத்தோம் அப்பா!

## மருமக்கள் துயரம்...

மருகரை மக்களாய்ப் பார்த்த மாமா
மகிழ்வூட்டி எமை அணைத்துக் காத்த மாமா
வருதுயரை வளர்தமிழால் ஒறுத்த மாமா
வல்முருகன் காப்பானென் றுரைத்த மாமா
திருவிழந்த மருமக்க ளாக நாங்கள்
துயருறவே எங்குநீ சென்றாய் மாமா
வருநாளில் உன்நினைவில் வாழ்வோம் மாமா
வேற்குமரன் தாளிருந்து அருள்வாய் மாமா!

## பெறாமக்கள் துயரம்...

அன்புதனைச் சொரிந்தீர் அரவணைத்தீர் முத்தமிட்டீர்
ஆனந்த மாய்வாழக் கதைகள் சொன்னீர்
இன்புடைய திவ்வுலகு எல்லாமே இனிதாகும்
ஏன்வாட்டம் என்றெமக்கு எடுத்துச் சொன்னீர்
துன்புறவே எம்மனது தூரவழி சென்றின்று
சொல்லாமற் மறைந்தீரே அப்பா அப்பா
என்றினிமேல் உன்போலே இனியவுற வாள்வோம் நாம்
எல்லாமே வெறுங்கனவாய் ஆச்சே அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் துயரம்...

பேசத் தெரியவில்லை பேசுமுறை பயிலவில்லை
பெறற்கரிய பாட்டனாரே எங்கே போனாய்?
வாசத் தண்டுகளாய் வாடியிங்கு துடிக்கின்றோம்
வாய்திறந்து சொல்லவகை யறியோம் ஐயோ
நேசத் தோடுனது மடியமருங் காலத்தை
நினைப்பதற்குக் கூட இனி முடியவில்லை
தேசு நாமிழந்தோம் தேடரிய சொத்திழந்தோம்
தெய்வமே உனையிழந்து போனோம் நாமே!

## பூட்டப்பிள்ளைகள் துயரம்...

ஓடிவந்து படுத்துறங்கும் மடியுமெங்கே
உரிமையுடன் அணைத்தெடுக்கும் கரங்களெங்கே
பாடிப்பல கதைகள் சொல்லும் நாவுமெங்கே
பரிவுடனே பார்க்குமருள் விழிகளெங்கே
நாடியிறை சென்றதாகப் பெரியோர் சொன்னார்
நாம்தளிர்கள் உன்வரவைப் பார்த்தேநிற்போம்
ஓடிவந்து எமையணைக்க வேண்டுமய்யா
உறங்கியுந்தன் மடிதவழ வேண்டுமய்யா

## தமக்கையார் துயரம்...

தம்பீ தம்பீயென வாயார அழைத்திருந்தேன்
தம்பிநீ பிரிந்ததனால் தரணியிலே நான்தவித்தேன்
அன்பு காட்டியெனை அம்மாவைப் போல்மதித்தாய்
அக்கா அக்காவென்று நாவார நீயழைத்தாய்
வெம்பி யழுகின்றோம் மூவரின்று இருவரானோம்
வேதனையை சொல்வதற்கு வார்த்தையின்றி தனியரானோம்
அம்பு தைத்ததுபோல் துடிக்குதடா எனமனது
அய்யாநீ கண்திறந்து ஒருதடவை பாராயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பி துயரம்...

கண்களிலே நீர்பொங்கிக் காட்டாறாய்ப் பாயுதண்ணா
விண்கல்லே தலைவீழ்ந்து வெந்ததுபோல் ஆகுதண்ணா
தண்ணிலவாய் அறிவுரைத்துத் தம்பியெனைக் காத்தஅண்ணா
விண்ணேகிப் போயினையோ வெந்தணலிற் புழுவானேன்.

## மைத்துனர், மைத்துனியர் துயரம்...

அன்புக்கு இலக்கணமே ஆதரிக்கும் நற்குணமே
அனைவரையும் உவந்தேற்கும் நல்மனமே
இன்பத்தில் பங்கேற்று துன்பத்தில் துணையிருந்து
எம்மனங்கள் மகிழவாழ்ந்த மைத்துணரே
துன்பத்தால் வாடுகின்றோம் துயரத்தால் மூழ்குகின்றோம்
துயர்துடைக்க எமக்குஇனி யாருளரோ?
'அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்' அழுகின்றோம்
அகமெங்கும் உனையேந்தி வாழ்வோமையா!

## உறவினர் துயரம்...

அயலார்க்குந் துயர் துடைக்க முன்வந்தாய்
அன்பான வார்த்தைகளால் எம்மை வென்றாய்
செயலாற்றும் உறவாக நீ திகழ்ந்தாய்
சொந்தங்களை அரவணைத்துச் சிறந்து நின்றாய்
புயலாகத் துயர்வரினும் எதிர்த்து நின்றாய்
புலியாகத் தீமைகளைத் தடுத்து நின்றாய்
இயலாது நாம்வாழ... எங்கேசென்றாய்
எங்கள்பொன்னுச் சாமிஐயா மனதை வென்றாய்

## சுற்றம் துயரம்...

முகமலர்ந்து விருந்தோம்பி முன்னின்று சபைநடத்தி
அகமகிழ வார்த்தையாடி அனைவரையும் கவர்ந்திழுத்தாய்
செகமதிலே நாம் தவிக்க செம்பொன்னே எங்குற்றாய்
அகமெல்லாம் அழுகிறதே ஆறுதல்தான் கூறாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றப் பா...

இறப்பில்லா வீடுண்டோ இழப்பில்லா வாழ்வுண்டோ
மறப்பில்லா மனமெங்கு முண்டோ – சிறப்பில்லா
துயரந் தனைவிடுத்து தொட்டநற் பணிமுடித்து
உயருவதே மாந்தர் தொழில்.

ஆக்கம்

**கந்தவனம் கோணேஸ்வரன்**
**திருக்கோணமலை**
**026 222 1869**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய விளக்கம்

**இந்து சமயம் என்றால் என்ன? அப்பெயர் வந்ததன் காரணம் என்ன?**

இந்து சமயம் என்பது வேதங்களை அடிப்படையாகக் கொண்டது. இருக்கு, யசுர், சாம, அதர்வணம் என அழைக்கப்படும் இவற்றை நான்கு வேதங்கள் என்றும் நான்மறைகள் என்றும் அழைப்பர். இன்று உலகில் உள்ள நூல்களுள் நான்கு வேதங்களே மிகப் பழமையானவை எனக் கணக்கிடப்பட்டுள்ளன.

இந்நான்கு வேதங்களையும் அடிப்படையாகக் கொண்டு இறைவழிபாடுகள் தோன்றின. அவற்றுக்கான நெறிமுறைகளும் தோன்றின. இவற்றை ஆதாரமாகக் கொண்டு எழுந்தவையே சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் எனப்படும் நெறிகள் இவற்றை அறுவகைச் சமயங்கள் என்றும் கூறுவர்.

எனினும் இவை அனைத்தும் சனாதன தர்மம் என்றே முற்காலத்தில் அழைக்கப்பட்டு வந்தன. ஆயினும் இந்திய உபகண்டத்தைத் தளமாகக் கொண்டு தோன்றியதால் இந்து சமயம் எனவும் வெளியாரால் அழைக்கப்படலாயிற்று.

**வேதங்கள் எவ்வாறு தோன்றின, அவை கடவுளால் அருளப்பட்டவையா?**

வேதங்கள் எவ்வாறு தோன்றின என்றோ எப்போது தோன்றின என்றோ எவராலும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. வேதங்கள் ஞானியரால் அருளப்பட்டவை எனக் கொள்ள வேண்டியுள்ளது.

நூற்றுக்கணக்கான ஞானியரின் சிந்தனைகளின் தொகுப்பே வேதங்களாகும். பல தலைமுறைகளைச் சேர்ந்த ஞானியர்கள் தங்கள் சிந்தனைகளில் உதித்த உயரிய கருத்துக்களைத் தம் சீடர்களிடமும் விளங்கிக் கொள்ளக் கூடிய அறிவு நிறைந்த மனிதர்களிடமும் தெரிவித்து வந்திருக்கிருக்கிறார்கள். இக்கருத்துக்களைப் பிற்காலத்தில் ஒருமுகமாகத் திரட்டியதன் தொகுப்பே வேதங்கள் எனப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கைக்குக் கிடைத்திருக்கும் தொகுப்பு நூலான நான்கு வேதங்களே உலகின் மிகப் பழைமையான நூல்கள் என அறியப்படும் போது இக்கருத்துக்கள் வாய்வழியாக உரைக்கப்பட்டு செவி வழியாக உள்வாங்கப்பட்டு பல தலைமுறைகளாகச் சிந்தனையில் தேக்கி வைக்கப்பட்டுப் பேணப்பட்டதென்பது ஒப்புக் கொள்ளக்கூடிய உண்மையாகும். இவற்றை நோக்கும் போது இந்திய ஞானியரின் பெருமையும் அவர்தம் சிந்தனையின் திறமையும் எம்மைப் பெருமை கொள்ள வைக்கின்றன.

வேதங்கள் கடவுளால் அருளப்பட்டவை என்ற கருத்து அச்சிந்தனைகளின் உயர்வு கருதித் தோற்றம் பெற்றது எனக் கொள்ளலாம். இறைவன் அருளால் ஞானியர்களுடைய சிந்தனையில் உதித்தவை என்றோ இறைவன் ஞானியரின் சிந்தனையை ஊடகமாகப் பயன்படுத்தினார் என்றோ கொள்ளப்படினும் தவறன்று.

இன்றும்கூட, சிறந்த செயல்களைப் புரிபவர்களையும் உயரிய கருத்துக்களை வெளிப்படுத்துபவர்களையும் தெய்வத்தன்மை பொருந்தியவர் என்று அழைப்பது உண்டல்லவா?

**வேதங்கள் எதைப்பற்றிப் பேசுகின்றன?**

வேதங்கள் உலகத் தோற்றத்தை ஆராய முற்படுகின்றன. இந்த உலகமும் பிரபஞ்சமும் யாரால் தோற்றுவிக்கப்பட்டன என்பது பற்றியும், ஏன் தோற்றுவிக்கப்பட்டது என்பது பற்றியும் அறிய முற்படுகிறது. கடவுள் என்றால் என்ன, கடவுளின் தன்மைகள் எவை, என்பவை பற்றித் தெளிவுகாண முற்படுகின்றன. உயிர்களின் தோற்றுவாய் என்ன, அவை ஏன் தோன்றின, ஏன் பிறப்பெடுக்கின்றன என்பவை பற்றியும் பேசுகின்றன. பிறப்பெடுக்கும் உயிர்கள் எவ்வாறு வாழ வேண்டும் எவ்வாறு வாழக்கூடாது என்றெல்லாம் கூறுகின்றன. சுருங்கக்கூறின் இறைவன், உயிர்கள், இயற்கை பற்றிய உண்மையை வேதங்கள் பேசுகின்றன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெய்வங்கள் பலவா? ஒன்றா? இதுபற்றி வேதங்கள் என்ன சொல்கின்றன?**

வேதங்கள் மனித குலத்தின் ஆரம்ப காலச் சிந்தனைகளின் வெளிப்பாடு என்பதை முதலில் உணர வேண்டும். சாதாரண மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், அறிவு சார்ந்தவர்கள் நுணுகி ஆராய்ந்து உண்மையைத் தேடவல்லதாகவும் சொல்லப்படும் கருத்துகளே நிலைபெறும் என்பது நடைமுறையில் கண்கூடு.

இதற்கிசையவே வேத காலத்துச் சிந்தனைகள் பாமர மக்கள் புரிந்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், அறிவு சார்ந்தோர் ஆராய்ந்து மூலத்தை விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன.

இயற்கைச் சக்தியின் ஒவ்வொரு வெளிப்பாட்டுக்கும் ஒவ்வொரு தெய்வம் இருப்பதாக வேதங்கள் பேசுகின்றன. ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றி வேதங்கள் சிறப்பாகப் பேசுகின்றன. அத்தகைய பகுதிகளைப் படிக்கும் போது அந்தந்தத் தெய்வங்களே பெரியன போல் ஒரு தோற்றம் ஏற்படும். ஆனால் ஒட்டு மொத்தமாக விளங்கிக் கொள்ளும்போது தெய்வம் ஒன்றே என்பது சந்தேகமறத் தெளிவுபடுத்தப்பட்டு இருப்பதைக் காணலாம்.

**அவ்வாறாயின் பல தெய்வ வழிபாடுகள் சரியாகுமா?**

பல தெய்வ வழிபாடுகள் நிச்சயமாகச் சரியானதே. ஒரு மனிதனை எடுத்துக் கொண்டால் அவன் பெற்றோரால் மகன் என அழைக்கப்படுகின்றான். நண்பர்களால் பெயர் சொல்லி விளிக்கப்படுகின்றான்.

அலுவலகத்தில் உத்தியோகப் பெயர் கூறி அழைக்கப்படுகின்றான். வீட்டிலோ மனைவிக்கு கணவனாகின்றான். பிள்ளைகளுக்கோ தந்தையாகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல பெயர்களால் அழைக்கப்படுகின்ற போதிலும் அவன் ஒருவனே என்பது வெளிப்படை. எனினும் அவன் அழைக்கப்படுகின்ற பெயரைப் பொறுத்து அவனது கடமை, தொடர்பு கொள்ளும் முறைமை, பழகும் விதம் என்பன வேறுபடுகின்றன.

உத்தியோகத்தராகச் செய்கின்ற கடமைக்கும் தந்தையாகச் செய்கின்ற கடமைக்கும் வேறுபாடு உண்டு. கடமை மாத்திரமல்ல உடை, நடைமுறை உரையாடும் விதம் என்பவற்றில் கூட வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவ்வாறே கணவன், நண்பன், மகன் என்ற வகையிலும் அவன் கடமை, உரிமை, தொடர்பாடும் விதம் என்பன வேறுபடுகின்றன.

இது போலவே தெய்வம் ஒன்றெனினும் மக்களின் நியாயமான விருப்பங்கள் தேவைகளுக்கேற்ப அத்தெய்வம் பல உருவங்களில் செயல்படுவதாகக் கொள்ளப்படும் நம்பிக்கையின் விளைவே பல தெய்வ வழிபாடு நிகழக் காரணமாகின்றது. எப்பெயரிட்டு அழைத்தாலும் எத் தோற்றத்தை மனக்கண்முன் நிறுத்தி வழிபட்டாலும் மனம் தூய்மையானால் அது மகத்துவம் நிறைந்ததே.

அதேபோல் தான் வழிபடும் தெய்வமும், அது சார்ந்த நடைமுறைகளும் மட்டுமே மிகச் சரியானவை என்றும் ஏனையவை பிழையானவை என்றும் ஒருவன் மனத்தளவிலேனும் நிந்திப்பானேயாகில் அது தெய்வ நிந்தனையின் பாற்படும் என்பதையும் மறத்தலாகாது.

**பல தெய்வ வழிபாடு என்ற போர்வையில் கல், மணல், மரம் என்பவற்றைக் கூடச் சிலர் வணங்குகிறார்களே இது பிழையாகாதா?**

இந்து சமயத்தில் இறைவழிபாடு தான் உச்ச முக்கியத்துவம் பெறுகின்றது. வழிபாட்டு முறைகளும், அதற்காகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படும் ஊடகங்களான பொருட்கள், தோற்றங்கள் என்பவையும் மனதை ஒருமைப்படுத்திச் செய்யப்படும் வழிபாட்டின் முன் இரண்டாம் பட்சமே. இதனை உணர்ந்து கொண்ட ஒருவர் வழிபாடு எதற்கூடாக எந்த முறைகளின் கீழ் நடந்தாலும் அது இறைவனையே சேர்கிறது என்பதில் சந்தேகம் கொள்ளமாட்டார்.

முற்காலத்தில் இன்று மனிதன் அனுபவிக்கும் வசதிகள் கிடையா. இருப்பவற்றைக் கொண்டும் கிடைப்பவற்றைக் கொண்டுமே திருப்தி அடையவேண்டிய நிலை இருந்தது. இதனடிப்படையிலேயே கல்லைப் பெறக்கூடிய மனிதன் தெய்வ வழிபாட்டுக்காக ஒரு கல்லைத் தேர்ந்தெடுத்து தானும் வணங்கி ஏனையோரையும் வணங்கும்படி தூண்டினான். காட்டில் திரிந்தவன் மரம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து வழிபடத் தலைப்பட்டான். ஆற்றங்கரையில் நின்ற ஒருவன் ஆற்றைப் புனிதமாகக் கருதி அதன் கரையிலுள்ள மணலில் உருவம் செய்து வழிபட்டான். இடையன் ஒருவன் பசுவின் சாணத்தில் உருவம் செய்து அதில் அறுகம்புல்லை வைத்து வழிப்பட்டான். இச்செயற்பாடுகளின் நோக்கம் இறைவனை வழிபடுவதற்கான தூண்டுதலை ஏற்படுத்துவனவாக இருந்ததேயொழிய அப்பொருட்கள் இறைவன் என்ற கருத்தை வலியுறுத்துவதாக அமையவில்லை.

**இத்தகைய தூண்டுதல்கள் ஏன் ஏற்படுத்தப்பட வேண்டும்? இவை இல்லாமல் இறைவனை வழிபட முடியாதா?**

எத்தகைய தூண்டுதல்களும் இல்லாமல் இறைவனை வழிபடமுடியும். ஆனால் இது எல்லோராலும் செயற்படுத்தக்கூடியதல்ல. பக்குவமடைந்தவர்களால் மட்டுமே தூண்டுதல்கள் எதுவுமின்றி இறைவனை வழிபடக் கூடியதாக இருக்கும். ஏனையோர் தூண்டுதல்கள் மூலமே இறைவனை வழிபட வேண்டிய தரத்தில் இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாகக் கூறுவதானால் நாட்டுப்பற்றாளர் ஒருவரின் உயிர்மூச்சு தான் பிறந்த நாட்டுக்கு விசுவாசமாகவே இருக்கும். ஒவ்வொரு கணமும் அவர் தனது செயற்பாடுகளால் நாட்டுக்கு சிறப்புச் சேர்த்துக் கொண்டேயிருப்பார்.

ஆனால் எல்லோராலும் இது முடிவதில்லை. சாதாரண மக்கள் நாட்டுக்காகச் செயற்பட வேண்டுமாயின் அவர்களுக்கு உரைகள் தேவைப்படுகின்றன. கோஷங்கள் தேவைப்படுகின்றன. வழிகாட்டல்கள் தேவைப்படுகின்றன. ஆகக் குறைந்தது தேசிய கீதம், தேசியக்கொடி என்பவையாவது தேவைப்படுகின்றன.

தேசிய கீதமும், தேசியக்கொடியும் இல்லாத நாடு உலகில் கிடையவே கிடையாது. புதிதாக ஒரு நாடு தோன்றினாற் கூட அந்நாட்டு மக்கள் முதல் வேலையாகத் தமக்கென ஒரு தேசிய கீதத்தையும் தேசியக் கொடியையும் தாபித்துக் கொண்டு அவற்றுக்கு மரியாதை செலுத்துகின்றனர். அதற்குச் செலுத்தும் மரியாதை நாட்டுக்குச் செலுத்தும் மரியாதையாகக் கருதுகின்றனர். நாட்டுக் கொடிக்கும் நாட்டுக் கீதத்திற்கும் மரியாதை செலுத்தாத மனிதன் உலகில் எவருமேயில்லை. அதேபோல் நாட்டுக் கொடியென்பது வெறும் துணியினாலும் வர்ணங்களாலும் ஆனது என்பதையும் நாட்டுக் கீதம் என்பது வெறும் ஒலிக்கூட்டமே என்பதையும் மனிதர்கள் அறியாமலில்லை.

கொடியும் கீதமும் நாடல்ல என்பதை நன்குணர்ந்திருந்தும் அவற்றை வணங்கும் சாதாரண மனிதன் போல்தான் சாதாரண பக்தனும் கல்லும் மண்ணும் மரமும் கடவுளல்ல என்பதை உணர்ந்திருந்தும் வணங்குகிறான் என்று கொள்ள வேண்டும்.

**இறைவன் உருமில்லாதவன் என்றும், உருவமற்ற ஒன்றுக்கு உருவங்கள் வைத்து வழிபடுவது பிழையானது என்றும் சில சமயிகள் கூறுகிறார்கள். இது பற்றி எங்கள் நெறி என்ன கூறுகிறது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் உருவமில்லாதவன் என்று பிற சமயிகள் சொல்வதை இந்துமதம் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் உருவங்களை வழிபடுதல் பிழையானது என்று கூறுவதை அது நிராகரிக்கிறது. இதைத் தெளிவாகக் கூறுவதனால் எச்சமயத்துக்கும் தன்மதக் கோட்பாடுகள் சரியானவை என்று ஸ்தாபிக்கப் பூரண உரிமையுண்டு. ஆனால் பிறமதக் கோட்பாடுகள் பிழையானவை எனக் கண்ணை மூடிக்கொண்டு கூற உரிமை கிடையாது. இதனால் தான் "நிராகரிக்கிறது" என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்து சமயத்தில் பக்தர்கள் தம் படித்தரத்துக்கு ஏற்ப இறைவனை மூன்று விதமாகக் கொண்டு வழிபடுகின்றனர். பெரும்பாலானோர் இறைவனை உருவத்தூடாக வழிபடுகின்றனர். இது விக்கிரக வழிபாடு ஆகிறது. ஒரு சிலர் இறைவனை உருவம் உருவமின்மை ஆகியன கலந்த தரத்தில் வைத்து வழிபடுகின்றனர். இது சிவலிங்க வழிபாடு எனப்படுகிறது. ஞானியரோ இரண்டும் கடந்து அருவ நிலையிலேயே அதாவது உருவமற்ற நிலையிலே வழிபடுகின்றனர். ஆகமொத்தம் மூன்று வித வழிபாடுகளும் இந்து தர்மத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

இறைவனுக்கு உருவமில்லை என்று கூறுகின்ற சமயத்தைச் சார்ந்தவர்கள் கூட இறைவனை ஆண்பால் விகுதி கொண்டே விளிக்கின்றார்கள் என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். ஆண்பால் விகுதி கொண்டழைக்கப்படும் போது இறைவன் ஆண் என்றாகிறது. ஆண் என்றாகும் போது அது உருவம் உடையதாகின்றதல்லவா?

அது மட்டுமல்ல அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று நிலைகளையும் கொண்ட அமைப்பு இறைவனுக்கு உருவமில்லை என்று சொல்கிறவர்களிடமும் காணப்படுகின்றது. உதாரணமாக, அவர்களது சமயநூலை எடுத்துக் கொள்வோமாயின் அந்நூலில் காணப்படும் கருத்துக்கள் உருவமற்றவை. அதாவது கண்ணால் பார்க்கவோ தொட்டு அனுபவிக்கவோ முடியாதவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை எழுத்துகள் வழியாக வெளிவரும்போது அருவுருவம் ஆகின்றன. எழுத்துகள் உருவமுள்ளவை போல் ஒரு புறம் தோன்றும். இன்னொரு புறம் உருவமற்றவையாக இருக்கும். ஆனால் அந்தப் புத்தகத்தில் தாள்களோ உருவமுள்ளவை.

சாதாரண மக்களுக்கு அந்நூலின் உருவம் தெரியும். எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கு அருவுருவமான எழுத்துகளும் புரியும். ஆனால் ஆய்ந்துணர வல்லவர்களுக்கு மாத்திரமே அதன் கருத்துக்கள் தெரியும். உருவமற்ற கருத்துக்களின் சிறப்புக் கருதி உருவமுள்ள புத்தகத்தை அவர்கள் புனிதமாக மதிப்பதில்லையா? எனவே எல்லா மதங்களிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ உருவ வழிபாடு இருக்கிறது என்பதுதான் உண்மை.

**இந்து மதத்தில் அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூன்று வகையில் கடவுளை வணங்கும் கோட்பாடு காணப்படுவதன் நோக்கம் என்ன?**
**அருவ நிலையில் எல்லோரும் கடவுளை வழிபடுவதில் என்ன சிக்கல் காணப்படுகிறது?**

உலகில் மனிதர்கள் எல்லோரும் ஒரே தரத்தினர் அல்லர். அகப்புறச் சூழல்கள் அவர்களில் ஆதிக்கம் செலுத்துகின்றன. வாழ்க்கை முறைகளும் சிந்தனை முறைகளும் மனிதர்களை வேறுபடுத்துகின்றன. சமயநெறியை ஒரு கல்விக் கூடமாகவும் பக்தர்களை மாணவர்களாகவும் பார்த்துக் கொள்வோமாகில் விஷயத்தை கிரகிப்பது இலகுவாக இருக்கும். பாலர் வகுப்பில் உள்ள மாணவனுக்கு இரண்டும் இரண்டும் எத்தனை என்று கேட்டால் விளங்கப் போவதில்லை. மாறாக அவனுக்கு அறிமுகமான பழங்களையோ, உணவுப் பண்டங்களையோ அல்லது வேறு பொருட்களையோ ஆதாரமாகக் கொள்ள வேண்டும். இதன் பிரகாரம் இரண்டு சாக்லேட்டுக்களும் இரண்டு சாக்லேட்டுக்களும் எத்தனை சாக்லேட்டுக்கள் என்று கேட்டால் அவன் அதிகமாகவும் ஆர்வமாகவும் கேள்வியைப் புரிந்து கொள்வான். இங்கே கேள்வியின் நோக்கம் மாணவனுக்கு சாக்கிலேட்டுப் பற்றிய அறிவூட்டுவதல்ல. மாறாக கணிதம் பற்றிய அறிவை ஊட்டுவதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போல்தான் ஆரம்பத் தரத்திலிருக்கும் மாந்தர்களுக்கு கடவுள் பற்றிய அறிவை ஊட்டுவதற்கு அவர்களுக்கு நன்கு அறிமுகமான அல்லது உற்று நோக்கி ரசிக்கக் கூடிய விக்கிரகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அந்த மாணவன் இரண்டாம் வகுப்புக்கு வந்து விட்டதாக வைத்துக் கொண்டால் அவனுக்கு இப்பொழுது கணிதம் கற்பதற்கு சாக்கிலேட்டுக்கள் தேவையில்லை. இலக்கங்களே போதுமானதாகின்றன. இலக்கங்களைக் கூட்டியும் கழித்தும் தனது கணித அறிவை விருத்தி செய்து கொள்வான். இலக்கங்கள் உருவமுள்ளவையும் அல்ல. உருவமற்றவையும் அல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையிலானவை. அதாவது அருவுருவ நிலையில் அவை காணப்படுகின்றன.

இதே போல் தான் இரண்டாம் படித்தர மாந்தர்களுக்கு அருவுருவ வழிபாடு கூறப்படுகிறது. இவர்களுக்கு உருவங்கள் தேவைப்படுவதில்லை. மாறாகக் கடவுளை நினைவூட்டுவதற்கு யாதாகினும் அடையாளமே போதுமானது.

இப்பொழுது அந்த மாணவன் மேல் வகுப்புக்கு வந்துவிட்டான் எனக் கொள்வோமாகில் சாதாரணமான கணக்குகளை மனக் கணக்கு மூலமே செய்துவிடுவான். மனக் கணிதத்தின் போது சாக்லேட்டுகளோ இலக்கங்களோ தேவைப்படுவதில்லை.

அருவ வழிபாடு இத்தகையதே. இங்கு உருவமெதையும் கற்பித்துக் கொள்ளாமலேயே மனம் கடவுளை வழிபடும் அளவுக்குப் பக்குவம் பெற்று விடுகிறது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்துசமயத்தில் அருவ, அருவுருவ, உருவ வழிபாட்டு முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முன்னேறி விட்டது. மனிதர்கள் முன்னேற்றமடைந்து விட்டார்கள். இந்த நிலையில் வழிபாட்டு முறையில் மூன்று தரங்களும் இருப்பது தேவையானது தானா? ஏனைய சில சமயங்களில் காணப்படுவது போல் உருவமற்ற வழிபாட்டு முறைகளை மட்டும் நாம் மேற்கொண்டால் என்ன?

உலகம் அறிவியல் ரீதியாக முன்னேறியிருக்கிறது என்று சொன்னால் ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இறையியல் ரீதியாக முன்னேறியிருப்பதாகக் கருதமுடியாது. "இந்த மதத்தின் மூலம் மட்டுமே இறைவனை அடையலாம்" என்று பிரசாரம் செய்கின்றவர்கள் இருக்கும் வரை "அந்த மதத்துக்கு மாறினால் எளிதில் இறைவனைக் காணலாம்" என்று ஏமாறுகின்ற மக்கள் இருக்கும் வரை இறையியல் ரீதியாக உலகம் முன்னேறியுள்ளது என்று எவ்வாறு கருதமுடியும்?

நிற்க, வழிபாட்டு முறையில் உருவம், அருவுருவம், அருவம் ஆகிய முறைகள் தேவையானவைதாம். ஏனெனில் ஒரு மனிதனது தரத்தை யாரும் அளவிட முடியாது. அவரவர் தமக்கு இயைபான வழிமுறைகளில் இறைவனை வணங்க வேண்டும் என்றுதான் இந்துமதம் எதிர்பார்க்கிறதேயொழிய இப்படித்தான் வணங்க வேண்டும் என்று இறுக்கமாக கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. உருவமற்ற நிலையில் தான் இறைவனை வழிபட வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதானது பாலர் வகுப்பு மாணவனை மனக்கணிதம் போடச் சொல்லி வற்புறுத்தி அவனுடைய மூளையைக் குழப்பி விடுவதற்கு நிகராகும். அவனாகவே மனக்கணிதம் போடும் தரத்திற்கு உயர்வதற்கு வழிகாட்டுவது தான் ஆசிரியரின் கடமை என்பதை உணர்ந்து கொண்டால் இந்து சமய வழிபாட்டு நிலைகளின் பெருமை புரியும்.

இன்னொரு வகையில் பார்க்கின் இறைவனை உருவமற்றவர் என்று சொல்லி வழிபடுகிறவர்கள் பக்குவமடையாத வரையில் எதனை வழிபட முடியும் என்ற வினா எழுவது நியாயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் என்ற வார்த்தையைத் தத்தம் மொழி மூலமாக நினைத்துக் கொள்கிறார்களா? அல்லது தத்தம் மொழியில் அச்சொல்லுக்காக நிற்கும் எழுத்துக்களை நினைத்து வழிபடுகிறார்களா?

நீரை, காற்றை, தீயை, ஒளியை, திசையை நினைத்துக் கொண்டாற் கூட அது அருவ வழிபாடாக அமையமாட்டாது. பின்னர் எதை நினைத்து வழிபடுகிறார்கள் என்ற கேள்விக்கான விடை மிகவும் சிக்கலானதாகவே அமையும். ஏனெனில் உலகில் இல்லாத பொருள் எதையும் எண்ணிப் பார்க்கக் கூட முடியாது. மனிதனின் தலையையும், சிங்கத்தின் உடலையும், பறவையின் வாலையும் பொருத்தித்தான் புதிய பொருளைக் கற்பனை பண்ண முடியும் என்பது சிந்திப்போருக்கு நன்கு புரியும்.

இச்சிக்கல்களால் தான் இந்து தர்மம் மூன்று தர வழிபாட்டு நிலையை அனுசரிக்கிறது. அவரவர் தமது ஆத்மிக பலத்துக்கேற்ப இறைவனை நினைத்துக் கொள்ள வழி சமைத்திருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உருவ வழிபாட்டை வலியுறுத்துகின்ற இந்து மதம் ஒரே உருவத்தை இறைவனின் அடையாளமாக அறிமுகப்படுத்தாமல் பல உருவங்களை அறிமுகப்படுத்தியதன் நோக்கம் என்ன?**

நோக்கம் எளிமையானது தான். அவரவர் விருப்பத்துக்கும் வாழ்வியல் முறைகளுக்கும் ஏற்ப இறைவனை வழிபடுதலே சிறப்பு என்பது தான் இந்து மதக் கோட்பாடு. இதன் அடிப்படையிலே தான் கடவுளர் உருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக தனது நாட்டை வளப்படுத்தவும் செல்வத்தைப் பெருக்கவும் விரும்பும் ஒரு தலைவன் அல்லது அரசன் ஆண்டி முருகனின் உருவத்தை வழிபட்டால் வேடிக்கையாக இருக்காதா? அத்தகைய ஒருவன் வணங்கும் கடவுளின் தோற்றம் செல்வச் சிறப்பும் தைரியச் சிறப்பும் உடையதாக இருந்தால் தானே அவன் கடவுளிடம் தனது எண்ணத்தை வெளியிட்டு ஒன்றித்து நிற்க இயலும்.

இளமையும் அழகும் துருதுரு வென்ற குணமுகமாக இருக்க விரும்பும் ஒருவனின் கடவுளர் திருவுருவம் முருகனாக இருந்தால் தானே சிறப்பாயிருக்கும். கல்வியைத் தருபவள் இவள் என்று வீணையும் ஏடுமாக இருக்கும் சரஸ்வதியின் திருவுருவத்தில் தானே மாணவனதும் கலைஞனதும் மனம் லயித்துப் போகிறது. உலகியல் செல்வத்தில் திளைத்து வாழ வேண்டும் என்று ஆசைப்படுகின்ற மனிதன், செல்வமும் சிறப்புமாக இருக்கும் திருமாலையும் லட்சுமியையும் தானே வழிபட முடியும். பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க விரும்பும் ஒரு பக்தனின் வள்ளி தெய்வானை சமேதராகக் காட்சியளிக்கும் முருகனையோ, பாமா ருக்மணியுடன் ஆனந்திக்கும் திருமாலையோ வழிபட்டால் அவர்கள் கோலமே அவன் இலக்கை கலைத்து விடாதா?

இதனாலேயே நம் முன்னோர்கள் பக்தனின் வேண்டுதலுக்கும் ஆசைக்கும் ஏற்ப இறைவனின் திருவுருவங்களை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவ்வாறாயின் நாம் விரும்பும் வடிவத்தில் கடவுளை வழிபடலாமா, இதை அனுமதித்தால் வழிபாட்டுக்குப் பயன்படும் கடவுளர் உருவங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகாதா?**

கடவுள் வழிபாடு என்பது மன அமைதியுடனும் ஒருமைப்பாட்டுடனும் நிகழவேண்டும் என்பதால் அவரவர் வடிவங்களை வணங்குவதற்கு இந்து தர்மம் அனுமதியளிக்கின்றது. ஆனால் இந்த அனுமதியை எல்லை மீறிப் பயன்படுத்தலாகாது.

ஒருவர் தாயின் மேல் நிறைந்த அன்பு கொண்டவராக இருக்கலாம். இதன் பிரதிபலிப்பால் தாயின் வடிவில் இறைவனைக் கண்டு வணங்குவதில் தவறேதுமில்லை.

இன்னொருவர் தந்தையை, குருவை, மகான் ஒருவரை இறைவடிவில் கண்டு வணங்கலாம். அதில் பிழையேதுமில்லை ஆனால் அத்தகைய ஒருவர் தனது தாயை, தந்தையை, குருவை தான் போற்றும் மகானை தான் வணங்குவது போல் பிறரும் வணங்க வேண்டும் என எதிர்பார்க்கலாகாது. அது சரியுமல்ல. அத்துடன் வாழும் அல்லது வாழ்ந்த ஒருவரின் வடிவத்தூடாக கடவுளைக் காண முயலும் ஒருவர் அந்த வடிவம் பற்றிய உயர்ந்த எண்ணத்துக்கு இடையூறு ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டியதும் முக்கியமானதாகும்.

இதேபோல் ஊருக்கு நன்மை செய்து தன்னை வருத்திக் கொண்டவர்களைக் கூட தெய்வத்தின் உருவமாகக் கொண்டாடும் வழக்கம் இருக்கிறது. இத்தகைய வடிவங்களைக் குறிப்பிட்டகிராமமோ அல்லது ஊரோ திரண்டு வழிபடுகிறது. ஆயினும் இவ்வடிவங்கள் கூட பிற ஊர்மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றோ அவர்களாலும் வழபாடியற்றப்பட வேண்டும் என்றோ எதிர்பார்த்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக மதுரை வீரன் வணக்கம் மதுரை சார்ந்த இடங்களில் மட்டுமே அதிகமாகக் காணப்படுகின்றமை நோக்கத்தக்கது. கண்ணகை அம்மன், திரௌபதை அம்மன் வழிபாடுகளும் இத்தகையே

ஆனால் எல்லோரும் வழிபடத்தக்க கடவுளர் உருவங்கள் தத்து வார்த்த விஷயங்களை அடக்கி விதிமுறைகளை அனுஷ்டித்தே வடிவமைக்கப்படுகின்றன. இவை ஞானியரால் அருளப்பட்டவை. சாதாரண மக்களுக்கு உருவங்களாகக் காட்சியளிக்கும் இவை இந்து தத்துவங்களை ஓரளவுக்கேனும் விளங்கிக் கொண்டவர்களுக்கு வியப்பையும் ஆனந்தத்தையும் தரவல்லவனாக இருக்கின்றன. நாம் வணங்கும் சிவன், பார்வதி, சிவலிங்கம், விஷ்ணு, லட்சுமி, துர்க்கை, முருகன், கணபதி போன்றவை இத்தகைய வடிவங்களே. தத்துவார்த்த ரீதியில் அல்லாமல் இத்திருவுருவங்களின் வடிவங்களில் மாற்றம் செய்ய எவருக்கும் அனுமதி இல்லை.

**ஞானியரால் வடிவமைக்கப்பட்ட உருவங்களில் அப்படி என்ன சிறப்புகள் இருக்கின்றன.**

ஞானியர்கள் சாதாரண மனிதர்கள் அல்லர். அவர்கள் எம்மை விடப் பன்மடங்கு மேம்பட்டவர்கள். ஆன்மிக நிலையில் உயர்ந்து இறையருளின் சிறப்பை நெருக்கமாகவும், நேரடி அனுபவத்தாலும் உணர்ந்து அதன் பெருமையை உலகுக்கு எடுத்துச் சொன்னவர்கள். அத்தகையவர்கள் தாம் உணர்ந்த பேரின்பத்தின் ஒரு பகுதியையேனும் சாதாரண மக்களும் பெற வேண்டும் என்ற நோக்கிலேயே கடவுளர் தோற்றங்களை வழங்கிச் சென்றிருக்கிறார்கள்.

கடவுளர் தோற்றம் எழுந்தமானத்தில் வகுக்கப்பட்டமையல்ல ஆழ்ந்த தத்துவத்துடனும் ஆகம நெறிப்படியுமே அவை அமைக்கப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக முருகன் கடவுளின் வடிவத்தை எடுத்துக் கொள்வோம். மேல் வாரியாகப் பார்க்கும் ஒருவர் முருகனை "இரண்டு பொண்டாட்டிக் காரன்" என்றே நினைப்பார்.

இத்திருவுருவம் பற்றிய புராணக் கதைகளும் சுவாரசியமாக அமைந்திருப்பது இவ்வெண்ணத்தை மேலும் வலுப்படுத்த உதவுகிறது.

சாதாரண மக்கள் முருகப் பெருமான் மேல் ஈடுபாடு கொள்ள அவரது தோற்றமும் அவர் பற்றிய இனிய கதைகளும் பெரிதும் காரணமாக இருக்கின்றன.

ஆனால் அறிவார்ந்த. கோணத்தில் உற்று நோக்குவோமானால் முருகப் பெருமானின் தோற்றமும், அவர் பற்றிய வரலாறுகளும் பெரும் தத்துவத்தை எடுத்துக் கூறி நினைக்கும் தோறும் பரவசத்தில் ஆழ்ந்த வல்லவனாக இருப்பதை உணரலாம்.

ஒரு மனிதன் நிறைவான வாழ்க்கையில் இருப்பின் அவனிடம் மூன்று அம்சங்கள் காணப்படுகின்றன. அவன் அறிவார்ந்தவனாக இருக்க வேண்டும் என்பது முதலாவது அம்சம். இரண்டாவதாக அவன் சமூகக் கடமைகளை ஆற்றுபவனாக இருக்க வேண்டும். இத்தகைய ஒருவனே தனக்கும் பிறருக்கும் பயன்படும் மனிதனாக இருக்கின்றான். அத்துடன் மனநிறைவுடன் வாழ்பவனாகவும் இருக்க வேண்டும்.

இப்போது திருமுருகனை நோக்குவோம். முருகன் அழகன். அழகாக இருக்க ஆசைப்படாத மனிதன் எவனுமிலன். அழகு மட்டும் போதாது அறிவும் வேண்டும். பிள்ளைகளுக்கு முதல் அறிவை ஊட்டுபவள் தாய். இங்கே முருகனின் தாயான உமாதேவியார் முருகனுக்கு ஊட்டிய அறிவின் அடையாளம் தான் கைவேல் இதனை ஞான சக்தி என்றழைப்பர். ஞானம் என்பது அறிவு. ஆகவே முருகனுக்கு உமாதேவியாரால் வழங்கப்பட்ட வேல் அறிவுச் சக்தியாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை இன்றைய பாஷையில் சொல்வதானால் சான்றிதழ் என்று கூறலாம். சான்றிதழ்கள் கல்வியாவதில்லை. ஆனால் கல்வியின் பெறுமதிமிக்க அடையாளம் சான்றிதழே என்றால் மறுப்பதற்குமில்லை. இவ்வாறே முருகனுக்கு அறிவூட்டிய தாயாரால் வழங்கப்பட்ட சான்றிதழ்தான் அவரது கைவேல் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அறிவை இளவயதிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதால் தான் முருகன் இளமையிலேயே ஞான சக்தியின் அடையாளத்தைப் பெற்றுக் கொண்டார். அறிவுச்சக்தி எவ்வாறு இருக்க வேண்டும்? வேலின் தோற்றமே கூறுகிறது. எதையும் ஊடறுத்து நுழையும் வல்லமை உடையதாக இருக்க வேண்டும்: வேவலின் கூர்மை சாட்சி, அகன்ற பரப்பைத் தழுவியதாக இருக்க வேண்டும்: வேலின் அகலப்பகுதி சான்று. ஆழமானதாகி நிலைபெற வேண்டும்: வேலின் கீழ்ப்பகுதி அந்த அமைப்பை இயம்புகிறது.

ஆழமாக, அகலமாக எதையும் ஊடுருவுகின்ற அறிவைப் பெற்றுக் கொண்ட ஒருவருக்கு சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய பணிகள் இருக்கின்றன. இதனை கிரியை என்றும் கூறுவர். சமூகப்பணி என்பதில், ஆற்றுகிறவரைக் காட்டிலும் எவருக்காக ஆற்றப்படுகிறதோ அவர்களின் நன்மை தான் முக்கியத்துவம் பெறுகிறது.

இங்கே முருகன், தேவர்கள் என்றழைக்கப்படும் நல்லவர்கள் படும் துன்பத்தைப் போக்க வேண்டி அசுரர்கள் எனப்படும் கொடியோரின் கொட்டத்தை அடக்குகிறார். இந்த கிரியையின் பயனாகவே கிரியா சக்தி எனப்படும் தெய்வயானையை மணமுடிக்கிறார். தெய்வயானை திருமணம் என்பது சமூகத்தின் நன்மை கருதி ஆற்றப்படும் கடமையின் வெளிப்பாடே.

அடுத்து முருகன் வள்ளியையும் தனது சக்திகளில் ஒன்றாகக் கொள்கிறார். முதற் சக்தி தாயாரால் ஊட்டப்பட்டது. இரண்டாவது சக்தி சமூகத்தால் ஏற்றப்பட்டது. மூன்றாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியான இச்சாசக்தி முருகனாலேயே ஏற்படுத்தப்படுகிறது. அதாவது விருப்பச் சக்தியாக வள்ளியம்மை வருகிறாள். புராணக் கதைகளின் படி வள்ளியை முருகன் தேடி வந்து காதலித்து மணம் புரிகிறார்.

இவற்றை தேர்ந்து கொண்டு நோக்கும் ஒருவருக்கு முருகனின் திருவுருவம் இரண்டு பொண்டாட்டிக் காரராகத் தெரிவதில்லை. மாறாக அறிவு (ஞானசக்தி) கடமை (கிரியாசக்தி) மனநிறைவு (இச்சாசக்தி) ஆகியன கொண்ட முழுமையான வாழ்வின் அடையாளமே. தெரியும் முழுமையான வாழ்வை விரும்பாதார் யார்? முருக வழிபாட்டின் தத்துவமே முழுமை பெற்ற வாழ்வு தான்.

**முருகன் வள்ளியை மணம் புரிவதற்காகப் பல உத்திகளைக் கையாண்டிருப்பதாகப் புராண வரலாறுகள் கூறுகின்றன. இது சாதாரண மனிதர் ஒருவனின் செய்கை போலல்லவா இருக்கிறது? கடவுளின் தோற்றமான முருகனுக்கு இது தகுமா?**

கடவுள் எல்லாம் வல்லவர். ஆயினும் மனித குலத்தின் ஒழுக்க வாழ்வு கருதி அவ்வப்போது தானும் விதி முறைகளுக்குக் கட்டுப்பட்டு முன்மாதிரியாகத் திகழ்கிறார். ஆயிரம் தொழிலாளர்களை வைத்து வேலை செய்விக்கும் பண்ணையாராக இருந்தாலும் அவர் வயலில் இறங்கி வேலை செய்ய முன்வரும் போது தொழிலாளர்களில் வேலைப்பளுவை அவரும் சுமந்து தானாக வேண்டும். பண்ணையார் என்பதற்காக சேறு படாமல் இருப்பதில்லை. இந்த அடிப்படையில் தான் வள்ளி முருகன் கதை இடம் பெறுகிறது.

வள்ளி வேடுவர் குலத்தில் வளர்கிறாள். வள்ளி எங்கே வாழ்ந்தாலும் தன்னோடு இணைய வேண்டியவர் என்பது முருகனுக்கு தெரிந்த ஒன்று. ஆனால் வள்ளி முருகனை அறிவதில்லை, வள்ளிக்குத் தான் யார், தான் பிறந்ததன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கமென்ன என்ற விபரங்களை முருகனே உணர்த்த வேண்டியவராகிறார். வள்ளி தன்னை உணர்வதற்கு அவள் உள்ளம் பக்குவம் பட வேண்டும் அதைத்தான் திருமுருகன் செய்கிறார்.

தெய்வானை பக்குவப்பட்ட ஆன்மா: தேவ தரத்தில் இருக்கிறார். தான் யாரென்பதும், தன் பிறப்பின் நோக்கம் என்னஎன்பதும் ஓரளவு உணர்ந்த நிலை தெய்வானைக்கு. எனவே பக்குவப்பட்ட ஆன்மாவைத் தன்னுடன் இணைத்துக் கொள்வது பரம் பொருளுக்கு இலகுவாக இருக்கிறது. சிரமம் இல்லாமலேயே தெய்வானை திருமணம் நடந்தேறுகிறது.

ஆனால் வள்ளி வேடர் குலத்திலே வளர்கிறாள். ஆன்மா இறைவனை நோக்கி உயராத போது இறைவன் ஆன்மாவை நோக்கி வந்து உதவுகிறார். எனவே முருகனும் மனித குலத்தவர் போலவே வள்ளியுடன் உறவாடுகிறார் வேடுவரும் பழகுகிறார். அவர்களது சுகதுக்கங்களுக்கு தானும் ஆட்படுகிறார். வள்ளி என்ற ஆன்மா இறைவனைத் தேடும் பக்குவமடைந்ததும் தன்னை இன்னாரென முருகன் அறிவுறுத்தி வள்ளி என்ற ஆன்மாவை தன்னுடன் கலக்க வழிசெய்கிறார். இதுவே வள்ளி திருமணத்தின் சாரம்.

இந்த கதையில் வரும் வேடிக்கை, சுவாரசியங்கள் எல்லாம், இறை பற்றிய எண்ணம் சகலதர மக்களிடமும் ஏற்பட வேண்டும் என்ற நோக்கைக் கொண்டவையே.

இன்றுங் கூட "நல்லவன் வாழ்வான்" "உண்மை உயர்வு தரும்" என்ற ஒருவரித் தத்துவத்தை விளக்குவதற்காகத்தானே சிறுகதைகள் கதைப்புதினங்கள், நாடகங்கள், திரைப்படங்கள் என்பவை சுவையான சம்பவங்களுடன் தொடர்பு படுத்தி வெளிவருகின்றன.

இதை புரிந்து கொண்டால், வள்ளி திருமணம் சுவை தெரியும். முருக தத்துவத்தின் பெருமை புரியும். முன்னோர் கொண்டிருந்த சிந்தனையில் சிறப்பும் புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடவுளரும் குடும்பம் நடத்துவது போல் எங்கள் சமயத்தில் சித்தரிக்கப்படுகிறதே: இதன் காரணம் என்ன?**

அறிந்ததைக் கொண்டுதான் அறியாத ஒன்றை விளக்க முடியும். ஏவுகணை அல்லது விண்ணோடம் எவ்வாறு வேலை செய்கின்றது என்ற பத்து வயதுச் சிறுவன் கேட்கக் கூடும் "தேவையற்ற கேள்விகளை கேட்கக் கூடாது" என்று அவனுக்கு தடைப்போட்டால் அது பாவம். விஞ்ஞான முறைப்படி தான் விளக்கப் போகிறேன். என்று புறப்பட்டால் அது பையனைப் பைத்தியம் பிடிக்க வைக்கும் காரியமாகி விடும். எனவே வாண வெடியை உதாரணம் காட்டி அது தீச்சுவாலையின் பின்புற உந்துதலினால் முன்னோக்கி எழுவதன் தன்மையை ஒப்பிட்டு ஏவுகணை அல்லது விண்ணோடம் இயங்கும் முறையை விளக்குவதே சிறுவனின் கேள்விக்குச் சரியான விடையாகிறது. அப்போதுதான் சிறுவனால் அது எப்படி இயங்குகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அது போல் தான் சாதாரண மக்களும் இறைவனை புரிந்து கொள்ள வேண்டும். அவர் தேவையை உணர்ந்து கொள்ள வேண்டும், என்பதற்காக நம் முன்னோர் கடவுளின் தன்மையைக் குடும்பங்கள் மூலம் உருவகித்து இருக்கிறார்கள்.

இதன் மூலம் கடவுள் எமக்கு நல்ல தந்தையாக, அன்புத் தாயாக, கூடி விளையாடும் சகோதரனாக எம்மோடு உறவாடுகிறார் என்பது போதிக்கப்படுகிறது. கடவுளுக்கு உயிர்கள் அடிமைகளல்ல: தந்தையுடன் முரண்படுவது போல், தாயுடன் சண்டை செய்வது போல் சகோதரனுடன் கோபித்து கொள்வது போல் அவை நடந்து கொள்ள முடியும். ஆயினும் அவரின் அன்பை இழந்து விடமுடியாது என்பது தெளிவுப்படுத்தப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு தந்தையின் கடமை என்ன, தாய் எவ்வாறு நடந்து கொள்கிறாள், சகோதரர்கள் எப்படி ஒருவருக்கொருவர் துணையாக இருக்கின்றார்கள், பிள்ளைகள் பெற்றோரை மதிக்கும் பாங்கு என்ன, மாமன், மருமகன், மைத்துனன், அண்ணன், தங்கை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பவற்றுக்கு உன்னத விளக்கமாகவும் கடவுளர் குடும்பம் சித்தரிக்கப்படுகிறது.

எனவே சாதாரண மக்கள் கடவுளை இலகுவாக உணர்ந்து கொள்ளவும்: கடவுள் தமக்கு அந்நியமானவரல்லர் என்பதை புரிந்து கொள்ளவும் குடும்ப உறவு, உறவுமுறை, சமூகக் கடமைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்ற தேர்ந்து அதன் படி ஒழுகவுமே எங்கள் மதத்தில் கடவுளும் குடும்பப்பாங்கானவராகச் சித்தரிக்கப்படுகிறார்.

**சிவன், சக்தி என்பதன் தாற்பரியம் என்ன?**

மேல் வாரியாகப் பார்த்தால் சிவனும் உமையும் எனக் கொள்ளலாம். இந்து சமயத்தின் பிரிவினரான சைவசமயத்தவர்கள் சிவனையே முழுமுதற் கடவுளாக வழிபடுகிறார்கள். சிவனின் மனைவியாகச் சக்தி உருவாக்கப்பட்டிருக்கிறார். சிவன் நடராஜாவாகவும், வைத்தீஸ்வரராகவும், விஸ்வநாதராகவும், கோணேஸ்வரராகவும் சைவமக்களால் கொண்டாடப்படுகிறார். அதேபோல் சக்தி பார்வதியாக, வைத்தீஸ்வரியாக, துர்க்கையாக, உமையாகப் பலவாறு போற்றப்படுகிறார்.

பண்டைய இலக்கியங்களில் வருணிக்கப்பட்ட "சேயோன்" என்ற கடவுளும் சிவனையே குறிக்கிறது என அறிஞர் கூறுவர். சேயோன் என்பது செய் என்ற சொல்லிலருந்து தோன்றியது என்றும் அவர்கள் கூறுவர். செய் என்பது பண்பட்ட நிலத்தைக் குறிக்கும் ஒரு சொல் எனலாம். நன்செய் (நஞ்சை) புன்செய் (புஞ்சை) என்று விளை நிலங்களை இன்றும் அழைப்பது கண்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தைப் பண்படுத்துவதற்கு மனிதனுக்குத் துணையாக இருந்தது காளை மாடு. இங்கே சிவபெருமான் காளையை உடையவராக இருப்பது நோக்கத்தக்கது. பயிர்ச்செய்கையும் மாடுகள் உடைமையும் பண்டைய நாட்களில் செவ்வனே வாழ வழி வகுத்ததை நோக்கின் சிவதோற்றம் நல்வாழ்க்கையின் சின்னமாக அமைவதைக் காணலாம்.

சிவபெருமான் செந்நிறத்தினர், உலகை வழிநடத்தும் சூரியனைத் தனக்குள் கொண்டவராக அமைந்துள்ளார். சிவனின் உமையானவள் பச்சை நிறத்தினள் என்று வர்ணிக்கப்படுகிறார். இது பூமிக்கு ஒப்பானது. இதனால் தான் உமைக்கு பூமாதேவி என்றும் பெயர் கூறப்படுகிறது. சூரியனும் உலகத்தினதும் தொடர்புகளில் தான் உயிர்கள் தோன்றுகின்றன என்ற விளக்கமாகவே சிவன் சூரியத்தன்மையும் சக்தி பூமித்தன்மையும் கொண்டு தோன்றுகின்றார்கள்.

இன்னொரு வகையில் நோக்கின், சிவனும் சக்தியும் இன்றேல் பிரபஞ்சமுமில்லை நாமுமில்லை. நாம் காணும் உணரும் பொருட்கள் அத்தனையும் சிவசக்தி மயமே. உலகின் மிகச்சிறு துகளான அணுசிவம் எனின் அதைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் நியூத்திரன், எலக்ரோன் என்பவ சக்தியில் வெளிப்பாடு கல் சிவமெனில் கல் துணிக்கைகளாகிக் கரைந்து விடாதபடி பிடித்து வைத்திருக்கும் தன்மை சக்தியாகிறது. உடல் சிவமெனில் அதனுள் நின்றோடும் குருதிச் சுற்றை இயக்கி உடலை நடமாட, சிந்திக்க, செயலாற்ற வைப்பது சக்தியாகும்.

ஒரு நல்ல குடும்பத்தில் தலைவன் சிவமாகிறான். தலைவி சக்தியாகின்றாள். சக்தி இல்லையேல் சிவமான தலைவனின் இயக்கம் தளர்ந்து போய்விடும். சிவம் இல்லையேல் சக்தியின் வெளிப்பாடு பற்றுக்கோடு இல்லாமல் புதைந்து விடும். சமூக வாழ்வின் மிகச் சிறிய கூறான குடும்பம் செவ்வனே அமைந்தால் சமூகமே செம்மை பெறும். சிவனும் சக்தியும் ஒரு நல்ல குடும்பத்தின் வெளிப்பாடு. உலக இயக்கத்தின் உருவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மூர்த்திகளின் வடிவங்கள் பற்றி............?

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூர்த்தங்களே மும்மூர்த்திகள் எனப்படுகின்றன. பரம் பொருளே பிரபஞ்ச இயக்கத்துக்காக மும்மூர்த்திகளைத் தோற்றுவிப்பதாக இந்துமதம் கூறுகிறது. இவர்களிற் பிரம்மன் படைக்கும் தொழிலையும், விஷ்ணு காக்கும் தொழிலையும், உருத்திரன் அழிக்கும் தொழிலையும் பிரதான கடமைகளாகச் செய்கின்றார்கள் என்று நமது மதம் கூறுகிறது.

நல்லவற்றை உருவாக்குவதும் அவற்றைக் காப்பதும் முறையே பிரமனுடையதும், விஷ்ணுவுடையதும் கடமையாகிறது. தீயவற்றை அழித்து பிரபஞ்சத்தை உய்விப்பது உருத்திரனின் பணியாகிறது. இத்திருமூர்த்திகள் தத்தமது கடமைகளின் போது வெவ்வேறு தோற்றம் கொண்டிருந்தாலும் மூவரும் ஒருவரே என்றும் இந்து மதம் அழுத்தமாகக் கூறுகிறது.

இன்றைய சமுதாய நோக்கில் இவற்றை நோக்குவோமானால் குடிசார்துறை, காவல்துறை, நீதித்துறை ஆகியவற்றின் சாயலை இங்கு காணலாம். குடிசார்துறை நல்லவற்றை ஆக்கிக் கொண்டிருக்கிறது. காவல்துறை அவ்வாக்கங்களுக்கு ஊறு நேராத வகையில் பாதுகாப்பளிக்கிறது. நீதித்துறையோ நல்லவற்றுக்கு இடையூறாக அமைபவற்றைத் தண்டித்து ஒடுக்கிறது. எனவே பிரம்மர் இங்கு குடிசார் கடமைகளின் உருவமாகவும், விஷ்ணு காவல்சார் கடமைகளின் உருவமாகவும், உருத்திரன் நீதிசார் நெறிகளின் தோற்றமாகவும் காணப்படுகின்றனர்.

இனி இவர்களின் வடிவங்கள் பற்றி நோக்குவோம். பிரம்மன் அறிவுசார் கடமையின் பாற்பட்டவர் ஆக்கத்துறைக்கு அறிவே பிரதானம் என்பது கண்கூடு. அறிவு நாற்திசை தழுவியதாக இருக்க வேண்டும். இதனாலேயே பிரம்மன் நான்கு திசைகள் நோக்கிய முகங்களை உடையவராக உருவகிக்கப்பட்டிருக்கிறார். பிரமனின் சக்தியாகக் கலாதேவியான சரஸ்வதி அமைந்திருக்கிறாள். இது அவரது படைப்புத் திறனை மேலும் அதிகரிக்கச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிற் சிறந்தோனான பிரம்மன் படைப்புத் தொழிலைச் செய்ய அனைத்துக் கலைகளிலும் சிறந்தவளாகிய சரஸ்வதி படைப்புத் தொழிலுக்கு மேலும் மெருகூட்டும் முகமாகத் திறமையுடன் துணையிருக்கிறாள். பிரம்ம தேவரும், சரஸ்வதியும் வாசம் செய்யும் இடங்கள் கலைக்கூடங்களாகவும், அறிவுமடங்களாகவும் அமைந்திருக்கின்றன.

விஷ்ணு காத்தற் தொழிலைச் செய்கிறார். பிரம்மனால் படைக்கப்பட்ட பூவுலகும் உயிர்களும் செல்வச் செழிப்புடன் பஞ்சம், பசியற்று வாழ்வததற்கும், தீமைகள் தலையெடுத்து பூமியின் நல்லொழுங்கை அழித்து விடாதிருப்பதற்குமான பொறுப்பை விஷ்ணு ஏற்றுள்ளார்.

ஊரைப் பஞ்சம், பிணி என்பவற்றிலிருந்து காப்பவர் ஐசுவரியவனாக இருக்க வேண்டும். விஷ்ணுவாகிய திருமால் ஐசுவரியனாகவே தோற்றம் தருகிறார். அவரது சக்தியாகிய லக்ஷிமிதேவி செல்வத்துக்கே அதிபதியாக அமைகிறார். இரப்போருக்கு இல்லையென்னாது வழங்கும் சக்தியுடைய மஹாவிஷ்ணுவிடம் உலகைக் காக்கும் படி பக்தர்கள் கேட்பது சரியாகத் தானே இருக்கிறது.

அதுவுமல்லாமல், உலகில் அறம் நலிந்து தீமை பெருகி உலகம் வருத்தமுறும் வேளையில் எல்லாம் உலகைக் காக்க அவதாரம் செய்பவராக மகாவிஷ்ணுவே விளங்குகிறார் என்பதையும் நினைவு படுத்திக் கொள்ளலாம். இந்து மதக் கடவுளர் மூர்த்தங்களில் மகாவிஷ்ணுவே அடிக்கடி பூமியில் அவதாரம் செய்து அறங்காத்தவராகின்றார் என்பது நோக்கத்தக்கது இராமராக, கிருஸ்ணராக அவதாரம் செய்து உலகில் அறம் அழிந்து விடாதபடி விஷ்ணு காத்து வருகிறார். இனிமேலும் அவதாரம் எடுத்துக் காப்பார் என்றும் இந்து மதம் நம்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணுவின் உறைவிடம் பாற்கடல் எனச் சித்தரிக்கப்படுகிறது. உலகின் செல்வங்கள் அனைத்துக்கும் கடலே காரணம். அதுமட்டுமன்றி இயற்கைச் செல்வத்தின் பெரும் பகுதியையும் கடலே கொண்டிருக்கிறது. இத்தகைய கடலில் பாம்பை மஞ்சமாகக் கொண்டு திருமால் தன் தேவியுடன் அமர்ந்திருக்கிறார்.

நீரின் அசைவு செல்வத்தின் நிலையாமையைக் காட்டுகிறது. கடல் ஆழத்தின் தன்மை, ஒருபுறம் உலகச் செல்வத்தின் பெரும்பாகத்தைக் கொண்டிருக்கும் சிறப்பை உணர்த்தினாலும், செல்வமென்ற கடலில் மிதப்பவர் எந்த நேரத்திலும் அமிழ்ந்து காணாமற் போய்விடக்கூடிய ஆபத்தையும் உணர்த்துகிறது. அதேபோல் திருமாலுக்கு நிழல் கொடுத்தும் பஞ்சணையாகவும் அமைந்துள்ள அரவமானது செல்வம் எத்துணைச் சுகத்தைத் தரினும் புற ஆபத்துக்களையும் தரவல்லது என்பதைக் காட்டுகின்றது.

திருமால் நீலநிற மேனியர், நீலநிறமானது ஆழத்தையும் உயரத்தையுமும் குறிக்கும் அடையாளமாகும். ஆழக்கடலும், உயர்ந்த வானமும் நீல நிறமாக இருப்பதை அவதானித்தால் உண்மை விளங்கும். எனவே திருமாலின் தன்மை அல்லது செல்வத்தின் ஆதிக்கம் பூமியின் ஆழத்தையும், வானத்து உயரத்தையும் தழுவியதாக அமையும் என்பதையும் காட்டுகின்றது.

இனி உருத்திரரிடம் வருவோம். உருத்திரர் அழித்தற் கடவுள் இயற்கையின் நியதி ஊறுபடாதிருப்பதற்கும், தீயன தலையெடுக்காதிருப்பதற்கும் இவரே பொறுப்பாக நின்று தீயவற்றை அழிக்கிறார். இவர் அகோரமான தோற்றங் கொண்டவர் போல் காட்சியளிக்கிறார். இவரது சக்தியான துர்க்காதேவியும் கடுமையான பாவனை கொண்டவராகக் காட்சியளிக்கிறார். மண்டையோடுகளை ஆபரணங்களாக அணிவதும் சுடலைப்பொடி பூசுவதும் உருத்திரனுடைய சிறப்பம்சங்கள் எனலாம். இவை உலகில் பிறக்கும் உயிர்கள் தாம் எடுத்துள்ள உடம்பை நிலையானது எனக்கருதி அகங்காரம் கொள்ளக்கூடாது என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் உலக வாழ்வில் எந்தத் தரத்தில் இருப்பினும் இயற்கையின் நியதிக்கு முன்னால் அது ஒரு பொருட்டல்ல என்பதையும் மண்டையோடுகளும் சுடலைச் சாம்பலும் எடுத்துக் காட்டுகின்றன. அவற்றில் ஏழை, பணக்காரர், அறிஞர், பேதை என்ற பேதங்கள் கிடையா. இயற்கையின் முன்னும் கடமையின் முன்னும் அனைத்தும் சமம் என்பதைத்தான் இது கூறுகிறது.

**கிருஷ்ணன் அல்லது கண்ணன் என்றழைக்கப்படும் தெய்வ மூர்த்தம் பெண்களிடையே சிங்கார லீலைகள் புரிவது போல் சித்தரிக்கப்படுவதன் காரணம் என்ன?**

கண்ணன் கிருஷ்ணன் எல்லாம் மஹாவிஷ்ணுவினுடைய அம்சம். மாவிஷ்ணுவுடைய கடமை உயிர்கள் வழித்தவறி போய் விடாமல் பாதுகாப்பது தான். அதுமட்டுமன்றி உலகில் நெறிமுறைகள் தளர்ந்து போகாதிருக்க அவ்வப்போது நடவடிக்கை எடுப்பவரும் மஹாவிஷ்ணுவே தான்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மஹாவிஷ்ணு மானிடராகப் பூமியில் தோன்றிப் பணிபுரிவதாக இந்து மதம் கூறுகிறது. மகாபாரதத்தில் கிருஷ்ணராகத் தோன்றியதும் உலகில் தர்மத்தை நிலை நிறுத்தும் பொருட்டே என்பதை மறத்தல் கூடாது.

இனிக் கண்ணனிடம் வருவோம். கண்ணன் இடையர் குலத்திலேயே வளர்ந்தவர். மானிடருக்கும் தேவர்களுக்கும் இடைப்பட்ட நிலையில் கண்ணன் வாழ்ந்து காட்டினார் என்பதன் பொருளாகவும் இடையர் குலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். கண்ணன் வாழ்ந்த இடம் கோகுலம் எனப்படுகிறது. கோகுலம் என்பதன் பொருள் பசுக்களின் இடம் அல்லது குலம் என்பதாகும். இதன்படி கண்ணன் பசுக்களின் மத்தியிலே வாழ்ந்திருக்கின்றான்.

இடையர் என்ற வகையில் கோகுலத்தில் வாழும் ஒருவரின் கடமை பசுக்களை பராமரிப்பது தான். இங்கு கண்ணனும் புல்லாங்குழல் இசைத்து ஆடிப்பாடி பசுக்களை மகிழ்வித்துத் தன்பால் ஈர்த்துக் கொள்கிறார். இங்கு மேலெழுந்த வாரியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுக்கள் என்பது கறவையினத்தைக் குறிக்கின்ற போதிலும் பதி, பசு, பாசம் என வரும் தத்துவப் பொருளில் பசு உயிர்களைக் குறிக்கிறது.

இடையர் இல்லாத பசுக்கள் கட்டப்பட்டோ, அடைக்கப்பட்டோ தான் இருக்கும். ஆனால் மேய்ப்பதற்கு இடையர் வாழுகின்ற போது பசுக்கள் தம் தளைகளிலிருந்து அதாவது கட்டுக்களிலிருந்து விடுபடுகின்றன. இடையரின் வழிகாட்டுதலின் கீழ் தாங்களாகவே உணவு தேடிக் கொள்கின்றன.

இங்கு பதி, பசு, பாசம் என்ற முப்பொருளில் பதியாகிய கண்ணன் வயப்படும் பசுக்களாகிய உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை எனப்படும் பாசங்களாகிய மூன்று தளைகளிலிருந்தும் விடுபடுகின்றன. பதியினுடைய நெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க தளைகள் மெல்ல மெல்ல அற்றுப் போகின்றன.

இந்த நேரத்திலே தான் கண்ணனின் சிங்கார லீலைகள் பார்க்கப்படவேண்டும். இங்கே கண்ணன் என்ற இறைவன் ஆணாகவும் இறைவனை எண்ணி வாழும் ஆன்மாக்கள் பெண்களாகவும் சித்தரிக்கப்பட்டிருப்பதை உற்று நோக்க வேண்டும். எனவே இறைவனைச் சுற்றி வந்த ஆன்மாக்களாகக் கோபியரையும், ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இறங்கி வந்து அருள் விளையாடல் புரியும் பதியாகக் கண்ணனையும் கொண்டால் நம் சிந்தனை தெளிவு பெறும். இதுவே கண்ணனின் லீலைகள் காட்டும் பேருண்மை.

**பாம்பை வழிபடும் பழக்கம் இந்துக்களிடம் உள்ளது. விஷப்பிராணியை வழிபடலாமா?**

இந்துக்களிடம் நாக வழிபாடு பரவலாகக் காணப்படுவது உண்மையே. நாகமும் பாம்பின் இனம் என்பதால் பாம்பை வழிபடுவதாகப் பாமரர்கள் நினைக்கிறார்கள். இலங்கையின் ஆதிக்குடிகள் இயக்கர், நாகர் எனச் சரித்திரம் கூறுகிறது. இயற்கையைத் தெய்வமாக வழிபட்டவர் என்ற கருத்திலோ இயற்கையோடு இணைந்தோர் எனப் பெயரேற்பட்டு நாளடைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கா் ஆகி இருக்கலாம். இவ்வாறே நாக வழிபாடு செய்தவா்கள் நாகா் எனப்பட்டிருக்க வேண்டும்.

மற்றெச் சமயத்தினரையும் விட இயற்கையை வழிபடுவதில் இந்துக்கள் மிகவும் ஆர்வமுள்ளவா்கள் என்பதை நோக்கின் இயக்கா் இந்துக்களாகவே இருக்க வேண்டும். இதன்படி இக்காலத்தில் வாழ்ந்த நாகவழிபாட்டை உடைய இந்துக்கள் அறிவிற் குறைந்தவா்களாக இருந்திருக்க முடியாது எனவே நாகம் என்பது தத்துவ அடையாளம் என்பதை உணர வேண்டும்.

ஒருசாரார் இயற்கையோடு ஒன்றுபட்டு வாழும் தா்மத்தை மேற்கொள்ள இன்னொரு சாரார் நாவினதும், அகத்தினதும் தூயதன்மைக்காக வழிபாடியற்றியிருக்கிறார்கள் நாவிலும் மனத்திலும் தூய்மையைப் பேணுவதும் இயற்கையோடியைந்து வாழ்வைப் பேணுவதும் ஒரே இலக்கை நோக்கிய நகா்வுகள் என்பது சிந்திக்கும் எவா்க்கும் எளிதிற் புரியும். உண்மை (உள்ளத்தூய்மை) வாய்மை (வார்த்தைத் தூய்மை) என்பவை உலக வாழ்க்கையின் சிறப்புகள் என்பதன் வெளிப்பாடே. நாவும் அகமும் கொண்ட நாக வழிபாடாகும்.

தற்காலத்தில் உள்ள சிறந்த கருத்துப்படக்காரா்களை விட நம்முன்னோர்கள் உயா்ந்த தத்துவ வார்த்தக் கருத்துப்பட வியலாளா்களாக விளங்கியமைக்கு எடுத்துக் காட்டுத் தான் நாக உருவத்துக்கான வழிபாடு என்பதைப் புரிந்தது கொண்டால் நம் முன்னோர் பெருமை விளங்கும்.

நாக வழிபாட்டைப் போலவே இயற்கை வழிபாட்டையும் நாம் பேணி வருகிறோம் என்பது பெருமை கொள்ளத்தக்க ஒன்றாகும்.

**கடவுளா் சிலைகளை மனிதா்கள் தானே ஆக்குகின்றார்கள். மனிதா்களால் ஆக்கப்பட்ட சிலைகளை வழிபடுவதில் பயனுண்டா?**

எங்கள் நாட்டின் தலைவரை நாங்கள் தான் வாக்களிப்பின் மூலம் உருவாக்கின்றோம் என்பதற்காக, அவருக்கு மரியாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்காமல் இருக்கலாமா? சாதாரண மனிதர் ஒருவர் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி ஆகின்றார் என்று வைத்துக் கொள்வோம். தேர்தலக்கு நிற்கின்ற போதே அவருக்கு ஒரு கம்பீரம் சேர்ந்து விடுகிறது. வாக்கு முடிவுகள் வெளியானதும் அவருக்கு மரியாதை சேர்ந்து விடுகிறது. பதவிப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர், அவருக்கு அதிகாரம் சேர்ந்து விடுகிறது.

சாதாரண மனிதராகத் தெருவில் நடந்து சென்ற போது அவரைக் கண்டு கொள்ளாத மக்கள், ஜனாதிபதியாக ஊருக்கு வருகின்றார் என்றதும், வீதி இருமருங்கிலும் நின்று, வரவேற்புக் கொடுப்பதில்லையா? அவருடன் பேசத் துடிப்பதில்லையா? அவர் கண்ணில் படுவதைப் பெருமையாகக் கருதுவதில்லையா, நாம் தானே ஜனாதிபதியை ஆக்கினோம் என்று எவரும் அலட்சியம் காட்டுவதில்லையே!

இதேபோல் தான் கடவுளர் சிலைகளும். வெறும் கல்லாக இருக்கும் போது அதற்கு விஷேச மதிப்பு எதுவும் இருப்பதில்லை. சிற்பாச்சாரியாரால் கடவுளர் சிலை செய்வதற்குப் பொருத்தமானது அதைத் தேர்ந்தெடுக்கப்படும் போது, அதற்கு ஒரு கம்பீரம் வந்து விடுகிறது. சிற்பமானதும் அது மரியாதைக்கு உரியதாகி விடுகிறது. ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதும், பதவிப்பிரமாணம் செய்து கொண்ட ஜனாதிபதியைப் போல், சகல சக்திகளையும் அது பெற்று விடுகிறது: வழிபாட்டுக்குரியதாகி விடுகிறது.

கடவுள் வழிபாட்டுக்கு, மன ஒருமைப்பாடு அவசியம். கோவிலில் காணப்படும் சிலைகள், கடவுள் அல்ல. ஆனால், நம்பிக்கையும், ஒருமைப்பட்ட மன வழிபாடும் அதனைக் கடவுளாகவோ, கடவுளின் தோற்றமாக ஏற்றுக் கொள்கிறது. எனவே வழிபாடும் பயனுடையதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடவுள் வழிபாடு எவ்வாறு அமைய வேண்டும் என இந்து மதம் போதிக்கின்றது?**

இறைவனை, மனந்திருத்தி வழிபட வேண்டும் என்றே இந்துமதம் எதிர்பார்க்கிறது. ஏனைய புறக்காரியங்களை அது இரண்டாம் பட்சமாகவே கருதுகிறது.

உலகில் எப்போதும் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் சாதாரண மக்களாகவே இருக்கின்றார்கள். இங்கு சாதாரண மக்கள் எனக் கருதப்படுவது அவர்களின் புறவாழ்க்கை முறையை நோக்கியன்று. அகவாழ்வு நோக்கியேயாகும். மக்களின் அகவாழ்வு, நேர்மை பெறும் பொருட்டே ஆலயங்கள், சடங்குகள் என்பவை அமைக்கப்பட்டுள்ளன. எனவே சாதாரண மக்கள் இறையுணர்வைப் பெறும் பொருட்டு, ஆலய வழிபாட்டை இந்து மதம் பெரிதும் ஊக்குவிக்கிறது.

ஒருவர் தினமும் ஆலயம் சென்று இறைவழிபாடியற்றி வருவது விஷேசமான நிலையாகும். முடியாதவர்கள் வாரத்தில் சிலநாட்களோ விசேட தினங்களுக்கோ ஆலயம் சென்று வழிபாடு செய்வதை ஏற்றுக் கொள்ளலாம். ஆகக் குறைந்தது, புண்ணிய தினங்களிலோ உற்சவத்திலோ ஆலயம் சென்று வருதல் சாதாரண நிலை மாந்தருக்கு நன்மை பயக்கும் காரியமாகும். ஆயினும், ஆலயம் சென்று கடவுளை வழிபடுபவர் மாத்திரம் தான் கடவுளின் அன்புக்கு உள்ளாவார் என்று இந்து மதம் என்றுமே வலியுறுத்தியதில்லை.

ஏனெனில், இறை வணக்கம் என்பது உள்ளத்திலிருந்து வந்தாற்றான் பயனுண்டு. அதை விடுத்துக் கட்டாயமாக கோயிலுக்குத் தினமும் வந்துதானாக வேண்டும் என்று மனிதர்களைக் கட்டுப்படுத்த முனைந்தால், சர்வதிகாரியொருவர் முன், உள்ளத்தில் வெறுப்பை வைத்துக் கொண்டு, மண்டியிட்டு மரியாதை செய்யும் ஓர், அடிமை போன்ற நிலை தான் மனிதர்களிடையே தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பார்ப்பதற்கு வழிபாடாக இருக்கலாம். ஆனால், உள்ளத்தில் உண்மையொளியைத் தோற்றுவிக்கப்போவதில்லை. பயன்தரப் போவதுமில்லை.

மனதாலும், வாக்காலும், செய்கையாலும், ஒருவர் மற்றையோருக்குத் தீங்கற்ற நல்வழியைக் கடைப்பிடித்து வாழ்வாராயின், அத்தகைய வாழ்க்கை கூட இறைவழிபாடாகவே ஏற்படுகிறது. பிற உயிர்களுக்கு உதவும் படியான வாழ்க்கை முறையொன்றை ஒருவர் அமைத்துக் கொண்டால், அது "மகேசுரபூசை" என வர்ணிக்கப்படுகிறது.

ஆனால், இத்தகைய உயர்வாழ்க்கை முறை எல்லோருக்கும் கைவரப் பெறாது. எனவே, ஆலயவழிபாடுகள் மூலம் இத்தகைய உயர்நிலையை அடைய முயற்சி செய்வதே சாலச் சிறந்ததாகும்.

**நாற்பாதங்கள் என்பவை எவை? ஏன் இவ்வாறு வகுக்கப்பட்டிருக்கிறது.**

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவையே நாற்பாதங்கள் எனப்படுகின்றன. நாற்பாதங்கள் என்பதன் பொருள் இறைவனை அடைவதற்கான நான்கு வழிகள் என்பதாகும்.

இவை, மனிதர்களின் ஆன்மிகத்தரத்துக்கேற்ப வகுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் கீழ்நிலை, மேல்நிலை என்று எதுவும் கிடையாது. பேச முடியாத பிள்ளைகள், முரட்டுப் பிள்ளைகள், அறிவார்ந்த பிள்ளைகள், செல்வம் நிறைந்த பிள்ளைகள் என்று வேறுபட்ட பிள்ளைகள் , வெவ்வேறு வடிவத்தில் அல்லது செயற்பாடுகளின் மூலம் தாயிடம் அன்பு செலுத்துவதாக வைத்துக் கொள்வோம். செயற்பாடுகள் வடிவங்கள் என்பவை வேறாக இருந்தாலும், தாயிடம் செலுத்தும் அன்பில் நாம் ஏற்றத்தாழ்வு கான முடியுமா? அவ்வாறு தான், இறைவனை நாம் நாடுகின்ற பாதைகள் வேறாயினும் பக்தியுணர்விலும் பயனிலும் வேறுபாடு இருப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, இவற்றை உலகியல் நடைமுறைகளோடு நோக்குவோம். சரியை என்பது பிறவுயிர்களுக்கு ஊறு செய்யாமல் வாழும் முறை எனலாம். ஆலயப் பணிகளுக்கு உதவுதல். நற்பணிகள் செய்வோருடன் இணைந்து அவர்களது பணிக்கு முடிந்த வரை உதவியாக இருத்தல் என்பவை சரியை வழிபாட்டின் பாற்படுகின்றன. வழிபாடானது ஆலயத்தை மையமாகக் கொண்டு விளங்குவதனால், ஆலயத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் ஆலயச் செயற்பாடுகளுக்கு உதவுதல் என்பவை சரியையின் பாற்பட்டது.

பொதுவாக உண்மையான ஆலயத் தொண்டரும், உண்மையான சமூகத் தொண்டரும் சரியை வழிபாடியற்றியவர்களாகக் கருதப்படுகின்றார்கள். ஆலயத் தொண்டருக்கு இயல்பாகவே ஆலயத்தில் பற்றும், இறைவன்பால் பக்தியும் மிகுந்திருப்பதால், அவரது செய்கையொவ்வொன்றும் ஆலய வழிபாடு சார்ந்ததாகவே இருக்கிறது. அதேபோல் சமூக தொண்டருக்கு சமூகத்தின் மேல் பற்றும், தன் செயற்பாட்டில் நேர்மையும் இருப்பதால் அவரது செயற்பாடுகளும் சமூக நலன் சார்ந்ததாகவே இருக்கிறது.

சமய சாரங்களை உணர்ந்து: அதன்படி நடந்து வழிபாடியற்றுவதோடு பிறரையும் அவ்வாறு செயற்பட வைக்கத்தக்க வகையில் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் ஒருவர், கிரியை வழிபாடு செய்பவராகின்றார். ஆலய நிலையில், இத்தகைய ஒருவர் மந்திரங்களை அறிந்தவராக, கிருத்தியங்களில் தெளிவானவராக, திருமுறைகளை முறைப்படி ஓதுபவராக, விரத அனுஷ்டானங்களைச் சரிவரக் கடைப்பிடிப்பவராக இருப்பார். சமூகவியல் நோக்கில், பிறருக்கு பயன்படும் படியான வாழ்க்கையைத் தானும் வாழ்ந்து, பிறரும் வாழ வகை செய்யும் வழிகாட்டியாக இருப்பார். கிரியை என்பது, முறைப்படியான செயற்பாடுகள் என்பதைப் புரிந்து கொண்டால் எல்லாம் தெளிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது: யோகம் எனப்படுகிறது. இறைபக்தியாளர் ஒருவர், புலன்களைத் தீய வழியிற் செல்ல விடாது அவற்றை அடக்கி, இறைவன் பால் செலுத்துவார். சமூகப்பணியாளர் "புலன்களைக் கூடாவொழுக்கம் தீச்செயல்கள் பால் செல்ல விடாது தடுத்து: நற்சிந்தனை, நல்லொழுக்கம் பேணுபவராக அமைவர். கடவுள் பக்தர் புலன்களைத் திருத்தி தன்னுள் இறைவனைக் காண, யோகம் வழிவகுப்பது போலவே, சமூக ஆர்வலர் தன்னைத் திருத்தினால் தரணியே திருந்தும் என்று சுய திருத்தத்தில் கவனத்தைச் செலுத்துகிறார். இது மூன்றாவது ரக வழிபாடு.

இறுதியாக, ஞானமார்க்கம் கூறப்படுகிறது. ஞானியர் செயலின் பால் கட்டுப்பட்டவரல்லர். தன்னையுணர்ந்து, இறையையுணர்ந்து இறைவனோடு ஒன்றிப்போனவர்கள் இவர்களது செயலில் பற்று இருக்காது. பந்தபாசம், நட்புபகை வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேதங்களைக் கடந்து, யாவும் இறைமயம் எனக் கொள்வோரே, ஞான நிலையையடைந்தவர்களாவர். பற்றற்றோர் என்று கூட இவர்களைக் கூறலாம். பாவ புண்ணியங்கள் பற்றி எவ்வித பேதங்களுமின்றி, தம் செய்கையை இறைவனிடம் ஒப்படைத்து விடும் இயல்பினர் இவர்கள்.

இவ்வாறான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழிமுறைகள் பற்றிய அறிவைத்தான் ஒருவரால் பெறமுடியுமே தவிர, கடைபிடிப்பது உயிரின் ஆன்மிக நிலையாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

**இறைவனைப் பற்றிய அறிவு மட்டும் நம்மை இறைவனிடம் கொண்டு சேர்க்குமா?**

நிச்சயமாக இல்லை. இறையுணர்வு அல்லது இறைபக்தி தான் நம்மை இறைவனிடம் கொண்டு சென்று சேர்க்கும். உலக நடைமுறைகளைப் பற்றி நன்கு அறிந்த ஒருவர் தன் அறிவுத் திறமையால் எவரும் அறியாமல் தீய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே, நல்லவர் போல் தோற்றந் தரலாம். அல்லது சமூகத்தின் பால் எவ்வித அக்கறையுமின்றிக் காலம் கடத்தலாம். இதனால் அவர் சமூகத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்றாகி விடாது. சமூகத்தின் பால் பற்று இருந்தால் மட்டுமே அவர் மேன்மையானவராக வாழமுடியும்.

இவ்வாறே இறைவன் பால் பக்தி கொண்டவரால் மட்டுமே இறைவனை எளிதில் அடைய முடியும். இதை சுருக்கமாகக் கூறுவதாயின் சமூக அறிஞர்கள் ஆசாரமறிந்தோர்கள் எனப்படுவோரெல்லாம் பக்தி இருந்தாலன்றி இறைவனை நெருங்குவதில்லை. ஆனால் இறைபக்தி உள்ள ஒருவரோ சமய உண்மைகள் ஆசாரங்கள் என்பவற்றை அறிந்திராத போதிலும் அவற்றைக் கடைப்பிடிக்காத போதிலும் இறையுட் கலந்து விடுகிறார். இதனைத் தான் "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்று திருமுறையும் போற்றுகிறது.

வசதிகளாலோ, அறிவாலோ இறைவனை அடையமுடியாது என்பதை விளக்க நமது புராணத்தில் ஒரு கதையுண்டு. அறிவிற் பெரியவரான பிரம்ம தேவனுக்கும் வசதிகளில் பெரியவரான திருமாலுக்குமிடையே யார் உயர்ந்தவர் என்பதில் மோதல் ஏற்பட்டது. அப்பொழுது எல்லாம் வல்ல சிவபிரான் சோதிமயமாகத் தோன்றி இச்சோதியின் முடியையோ அடியையோ உங்களில் எவரேனும் கண்டு கொண்டால் அவரே உங்களில் உயர்ந்தவர் என்று கூறினார்.

அறிவின் வல்லமையைக் கொண்டு பிரம்மன் உயரப் போய் முடியைக் காண முயன்றார். செல்வத்தின் சக்தியைக் கொண்ட விஷ்ணு கீழ் நோக்கிச் சென்று சோதியின் அடியைக் காண முயன்றார். ஈற்றிலே இருவருமே தோல்வியுடன் திரும்பி வந்து தமது இயலாமையை ஏற்றுக் கொண்டனர். அறிவாலோ, செல்வத்தாலோ இறைவனைகட கட்டுப்படுத்த முடியாத இக்கதையை விளக்கத்தான் நம் ஆலயங்களில் சொக்கப்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிக்கின்ற சம்பவம் இடம் பெறுகிறது. சொக்கப்பன் என்றால் எம்மை அன்பினாலே வசப்படுத்திய தலைவன் என்று பொருளாகும்.

திருமாலுக்கும் பிரம்மனுக்கும் கட்டுப்படாத இறைவன், மதுரையிலே செம்மனச் செல்வி என்ற கிழவிக்காக கூலியாளாகி, பிட்டுக்கு மண்சுமந்து, மன்னன் கட்டளையால் பிரம்படியும் பெற்றார். என்பதை நோக்கின் பக்தியின் பெருமையும் சிறப்பும் புரியும்.

**சமய அனுஷ்டானங்கள், திருமுறை ஓதல் என்பவையின்றி இறைவனை வழிபட முடியுமா, அப்படி வழிபடுவதை இந்து சமயம் ஏற்றுக் கொள்கிறதா?**

எதற்கும் ஒரு நியமம் உண்டு. சமய அனுஷ்டானமும் அப்படித்தான். காலையில் நித்திரை விட்டெழும் ஒருவர், காலைக்கடன்களை முடித்து, குளித்து, சுத்தமான ஆடை அணிந்து, தன்பணி தொடங்க வேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். ஆனால், எல்லோரும் இந்நியதிப்படித்தான் செயல்படுகிறார்கள், என்று சொல்ல முடிகிறதா? அவரவர் உடல்நிலை, சூழ்நிலை, கால்நிலை, மனநிலை என்பவற்றை அனுசரித்து, இவற்றுள் வேறுபாடுகள் தோன்றுவதில்லையா? அதனால், அவர் உலகப்பணிகளுக்கு உகந்தவர் அல்லர் என்று ஆகிவிடமாட்டார்.

இதேபோல் தான், சமய அனுஷ்டானங்கள், திருமுறை யோதல் என்பவையும் விதிக்கப்பட்டுள்ளன. வசதியும், வாய்ப்பும் உள்ளவர்கள் இவற்றைக் கடைப்பிடிப்பது உத்தமம். பாடசாலைக்கு வருவதற்கென மாணவர்களுக்கு ஒழுங்கு முறைகள், விதிக்கப்பட்டுள்ளன. இவை பொது நன்மை கருதியவையாகும். இவைகள் கல்வியாவதில்லை கல்விக்கான தூண்டுதல்களே இவை.

இதேபோல் தான் சமய அனுஷ்டானங்களும், பொது நன்மை கருதியும், உளத்தூய்மையின் நல்லொழுக்கம் கருதியுமே ஏற்படுத்தப்பட்டுள்ளன. தூய்மையாகவும், ஆரோக்கியமாகவும் இருத்தல் நல்ல சிந்தனைகளுக்கான அத்திவாரம் என்பதை மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடலாகாது. எனவேதான் சமய அனுஷ்டானங்கள், உடல் தூய்மையையும் ஆரோக்கியத்தையும் பேணத்தூண்டுவதன் மூலம் உளத்தூய்மையை உருவாக்க முனைகின்றன.

நாம் உஷ்ண வலயப் பகுதியில் வாழ்கின்றோம். எனவே, நாங்கள் ஆலயத்துக்குச் செல்லும் முன்னர் குளித்து, தோய்த்து உலர்ந்த ஆடையை உடுத்திச் செல்வது கஷ்டமான ஒன்றல்ல. மாறாக, உடலைச் சுத்தம் செய்யாமல், தோய்க்காத ஆடை அணிந்து செல்வதாகவும் வைத்துக் கொள்வோம். எங்கள் உடல் வியர்வையின் பிசுபிசுப்பு எங்களுக்கே அருவருப்பாக இருக்காதா? எங்களுக்கே இப்படியென்றால், அருகில் நிற்பவர் எவ்வாறு சகித்துக் கொள்வார், வியர்வை மணமும் அருவருத்த மனதும் கொண்ட நிலையில், எங்ஙனம் இறைவன்பால் மனதைத் திருப்பி வழிபடமுடியும்? நாம் ஒவ்வொருவரும் பேணும் சுத்தம், எம்மையும் பிறரையும் உடலாலும் மனத்தாலும் தூய்மையுறச் செய்து. இறைவன்பால் சிந்தனையைத் திருப்பி உதவுகிறது. கோயிலில் வீண்பேச்சு தவிர்த்தல், ஆடம்பர உடை ஆபரணங்களைத் தவிர்த்தல், கால் நீட்டி அமர்ந்திருத்தலை தவிர்த்தல், என்பவையெல்லாம் கவனம் திசைதிரும்பாதிருப்பதற்காக மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடுகள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதேபோல், கிரியைகள், மந்திரங்கள் என்பவை இறைவன் பால் மனத்தினை இலகுவில் இட்டுச் செல்லும் கைங்கரியங்களாகும். நாதஸ்வரம், மேளம் என்பவற்றின் இசை, பக்தர்களை மெய்மறக்கச் செய்யும் வசியங்களாகும்.

விரதங்கள் கூட, சமய அனுஷ்டானங்களின் பாற்பட்டவை தாம். விரதங்கள் மூலம் மனம் தூய்மையாகிறது. உடல் ஆரோக்கியம் பெறுகிறது. எனவே, சமய அனுஷ்டானங்கள் என்பவை ஒருவரை மனோதத்துவ ரீதியில் இறைவன் பால் நாட்டம் கொள்ள வைப்பதற்கான முயற்சிகளே என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், இவை எதுவுமின்றிக் கூட இறவனை வழிபட முடியும். ஞானியர்களும், யோகியர்களும் அநுஷ்டானங்களில் அக்கறை செலுத்துவதில்லை. ஞானியர் இறைவனும், தாமும் வேறல்லர் என்ற நிலையில் இருப்பவர்கள் யோகியர்கள். ஐம்புலன்களையும் அடக்கி தமக்குள்ளே தெய்வீக ஒளியைக் கண்டு பரவசப்படுபவர்கள். இத்தகையோருக்கு சரியை, கிரியை ஆகிய அநுஷ்டானங்கள், ஆலயங்கள் என்பவை முக்கியமல்லாதவை.

ஆனால், வாழ்க்கைச் சிக்கல்கள், பலரைச் சமய அநுஷ்டானங்களிலிருந்து தூர விலக்கி வைத்து விடுகின்றன. இவர்கள் இறைவனை மனதினில் நினைத்துக் கொண்டு: வாழ்ந்தாற் கூட, அது வழிபாடு தான். தமது செயல்களின் பெறுபேறுகளுக்கு இறைவனே பொறுப்பு என்று உணர்ந்து கொண்டால் அது ஞானமாகிறது.

கடமையை நேராகச் செய்பவனிடத்தும், இரக்க சிந்தனை உள்ளவரிடத்திலும், பெற்றோரைப் பேணுபவரிடத்தும், மனைவி குழந்தைகளை நேரிய வழியிற் காப்பவரிடத்தும் தெய்வம் தாமாகவே தேடி வருகிறது என்று இந்து மதம் அடித்துச் சொல்கிறது. கடமைகளைச் செய்யாமல் இறைவனை வழிபடுவது எவ்வளவு அபத்தமோ அவ்வளவு அபத்தம் இறைவனை நினையாமல் கடமைகளை ஆற்றுவது, என்பதை நினைவிற் கொள்ளல் நன்று. எந்தச் சூழ்நிலையிலும் இறைவனை மனத்தால் நினைத்து உருகி வழிபடுவதற்கு தடை ஏற்படமாட்டாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு எத்தன்மையுள்ளதாக இருக்க வேண்டும்?**

இறைவனை அரசனாக மதிக்கலாம். ஆண்டவனாகக் கொள்ளலாம். அம்மாவாக, அப்பாவாக போற்றலாம். நல்லதொரு நண்பனாகப் பாராட்டலாம். வேலைக்காரனாக மதித்து, ஏவல் கூட செய்விக்கலாம். இதில் தவறேதுமில்லை ஆனால், இந்த உறவு முறைகள் எல்லாம் மாசற்ற அன்பின் நிமித்தம் தான் ஏற்பட வேண்டுமே யொழிய, அகங்காரத்தின் நிமித்தமன்று. இறைவனை அன்பினால் மட்டுந்தான் கட்டிப்போட முடியும்.

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்று மாணிக்கவாசகர் கூறினார். "பித்தா என்று சுந்தரர் வைதார். "தாயினும் நல்ல தலைவர்" என்றார் ஞானசம்பந்தர். தன்னைக் கண்ணனின் மனைவியாகப் பாவித்துக் கொண்டார். சூடிக் கொடுத்த நாச்சியார் எனப்படும் ஆண்டாள். தோழனாக இறைவனைப் பாவித்த சுந்தரர், தான் பெற்ற நெல்லை வீட்டுக்கு எடுத்து வந்து தரும்படி உத்தரவு போட்டு வேலை வாங்கினார். மதுரையில் வாழ்ந்த கூனற்கிழவி செம்மனச் செல்வியின் அன்பால் இறைவன் கூலியாளாகிப் பிட்டுக்காக மண்சுமந்து பிரம்படியும் பட்டார். மகாகவி பாரதியார் இறைவனை வேலைக்காரனாக நினைத்துக் கவிதையும் பாடியுள்ளார்.

இவையெல்லாம் இறைவன், அன்புக்குக் கட்டுப்பட்டுப் பக்தனுக்காக எந்த நிலைக்கும் இறங்கி வரச்சித்தமாக இருக்கிறார் என்பதையே உணர்த்துகின்றன. இந்து சமய வழிபாட்டு முறையில் உள்ள மிகச் சிறப்பு இது தான். ஆலயங்கள், அபிஷேகங்கள், கோலக்கொடிகள், கொட்டு முழக்கம் எதுவும் இல்லாவிட்டாலும் சீலம் பேணும் ஆன்மாவைத் தேடி இறைவன் தானே வருவான் என்பது இந்து மத நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேளதாளங்கள், நாதஸ்வரங்கள், மணியோசைகள் என்பவை இறைபக்திக்குக் குந்தகம் ஏற்படுத்தாதா? ஓசைகளின் மத்தியில் வழிபாடியற்ற மனம் இடந்தருமா?**

இதே போன்றொரு கேள்வியை அமைதிவழிப் பிரார்த்தனை நடத்தும் சமய குரு ஒருவர், இந்துமதப் பெரியார் ஒருவரிடம் கேட்டாராம். அதற்கு அவர் அளித்த பதிலைப் பாருங்கள்.

"இரண்டு குடும்பங்களை எடுத்துக் கொள்வோம். காலையில் எழுந்து பரக்கப்பரக்க காலைக்கடமைகளை முடித்து விட்டுப் பெற்றோர் பணிக்காக அலுவலகம் புறப்பட்டு விடுகின்றனர். நின்று நிதானமாக உரையாட முடியாத நிலையில் காலை மறைந்து விடுகிறது.

மாலையில், குழந்தைகள் பாடசாலை விட்டு பின்னர் விளையாடி முடித்து வருகின்றனர். பெற்றோரும் பணிமுடிந்து வீடு வந்து சேர்கின்றனர். ஒரு வீட்டுக்கு குழந்தைகள் பெற்றோரைக் கண்டவுடன் கட்டியணைத்து முத்தமிட்டு ஆரவாரம் செய்து அன்பை வெளிப்படுத்துகின்றனர். பெற்றோரும் பதிலுக்கு குழந்தையை உச்சி மோந்து களிக்கின்றனர். ஆனால் அடுத்த வீட்டிலோ பிள்ளைகள் ஆளுக்கொரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டு பெற்றோரைப் பார்க்கின்றனர்.

இதிலே முதலாவது குடும்பம் எங்களுடையது. இறைவன் எங்கள் பெற்றோர். நாங்கள் குழந்தைகள். இங்கே அன்பு இல்லையென்று சொல்லி விட முடியுமா?

இந்த விளக்கம் எளிமையானது. இறைவன் மேல் அன்பு செலுத்துவதற்கு இனிய ஒலிகள் இடையூறாகா என்பதை உணர்த்தப் போதுமானது.

என்னும், மேளதாளங்கள், நாதஸ்வரங்கள் மணியோசை, மந்திரஒலி எல்லாம் இசைநயம் கருதியவை. எங்கள் பண்பாட்டில் உயர்வைக் காட்டுபவை. இறைவன் இசைக்கு வசமாகிறான் என்பது எங்கள் சமயத்தாரின் நம்பிக்கை. இசையில் எங்கள் உள்ளம் லயித்து, இனிய சுபாவம் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை, நாட்டியம், நாடகம் போன்ற கலைகளுக்கு பண்டைக்காலந் தொட்டு களம் அமைத்துக் கொடுத்தவை கோயில்கள் தாம். இறைவன் நாதமாக இருப்பவன் என்பதால் நாதன் எனப்படுகிறார். நடனத்தில் லயித்திருப்பதனால் தான் ஆடல் வல்லான் என்றும் 'நடராசாப் பெருமான்' என்றும் போற்றப்படுகிறார். நாடகத்தைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை பக்தர்களின் பெருமையை உலகறியச் செய்வதற்காக வேடந்தாங்கிய செய்திகள் பலப்பல.

விருத்தர் வேடத்தில் சுந்தரரை ஆட்கொண்டது. கூலியாள் வேடத்தில் செம்மனச் செல்வியின் பெருமயை உலகுக்குணர்த்தியது. வேடன் வடிவில் வள்ளியை மயக்கியது. மாணிக்கவாசகரைக் காப்பாற்ற நரிகளைக் குதிரைகளாக்கியது என இறைவன் போட்ட நாடகங்களும் வேடங்களும் எண்ணிறந்தவை.

உரை, இசை, நாட்டியம், நாடகம் என்பவை சைவமக்களை பொறுத்த மட்டில், அறிவூட்டற் கலையாகவே ஆதிகாலந் தொட்டும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. கோவில்களைக் களமாகக் கொண்டு வாதிடு மன்றம், இசையரங்கு, நாடகங்கள், நாட்டியங்கள் என்பவை நிகழ்த்தப்பட்டன. இவற்றின் மூலம் மக்களுக்கு வாழ்வியற சேதிகள் சொல்லப்பட்டன. அறிவு வளர்க்கப்பட்டது கலைகள் பயிற்று விக்கப்பட்டன நாகரிகம் பண்பாடு என்பவை தோற்றுவிக்கப்பட்டன.

எல்லாவற்றிற்கும் மேலாக, இசை உள்ளத்துக்கு இனிய ஆனந்தத்தையும், அமைதியையும் அளிக்கிறது. ஆனந்தத்தின் மூலம் அமைதி ஏற்படுமிடத்து அதுவே இறைவன் சந்நிதானமாகிறது. எனவே இசை எங்கள் உள்ளத்திலேயே ஆண்டவனைக் காண வைக்கிறது. இப்படி பல காரணங்களால்தான் இந்து மதம் இறைவழிபாட்டில் இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவனுக்கு நைவேத்தியம் செய்வது அழகான பூக்களைக் கொண்டு மாலையிடுவது. பூத்தூவுவது என்பவற்றின் நோக்கங்கள் என்ன? நைவேத்தியங்களை இறைவன் சாப்பிடுவதில்லையே........ மலர்களும் வீணாகத்தானே போகின்றன?**

இவை இறைவன் மேல் மனிதர்கள் கொண்டிருக்கும் அன்பின் வெளிப்பாட்டுக்குக் கொடுக்கப்படும் உருவங்களாகும். நைவேத்தியத்தை இறைவன் உண்பதில்லை என்பது சிறு குழந்தைகளும் அறிந்த ஒன்று, அப்படியிருக்க, காலங்காலமாக ஏன் இவ்வாறு நடந்து கொண்டிருக்கின்றோம் என்றால், அது எளிமையான இனிமையான தத்துவத்தைக் கொண்டிருப்பது தான்.

உங்களுக்கு ஒரு வயதில் சிறுகுழந்தை இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்தக் குழந்தைக்கு நீங்கள் தான் உணவூட்ட வேண்டும். குளிப்பாட்ட வேண்டும். தலை சீவ வேண்டும். ஆனால், அந்தக் குழந்தை தன் பிஞ்சுக் கரங்களால் தனக்குக் கிடைத்த உணவில், கையில் அள்ளக் கூடியதை எடுத்து உங்கள் வாயில் வைக்கும் போது, அதன் பாசத்தை எண்ணி நீங்கள் நெகிழ்ந்து போவதில்லையா?

அந்த உணவை உண்பதால் நீங்கள் பசியாற முடியாது. அதுவுமல்லாது அது உங்களால் குழந்தைக்கு வழங்கப்பட்ட உணவில் சிறு பகுதியே. இவ்வாறிருக்க உள்ளம் ஏன் நெகிழ்ந்து போகிறது? இங்கே உணவோ, அதன் பெறுமானமோ பெற்றுக் கொள்பவருக்கு அது எவ்வளவு பயன்படுகிறதோ என்பவை முக்கியமன்று குழந்தையின் அன்பு தான் முக்கியத்துவம் பெறுகிறது. அது போல்தான் இறைவன் என்ற அளப்பரிய அன்னையால் எமக்களிக்கப்பட்ட உணவில் ஒரு சிறு பகுதியை, குழந்தை தனக்குக் கிடைத்த உணவைத் தன்னுடையது என்று நினைத்துக் கொள்வது போல, நாமும் எமது திறமையால் பெற்றுக் கொண்டதாகக் கருதிக் கொண்டு, இறைவனுக்கு காணிக்கையாக்குகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைவேத்தியம் படைக்கப்படுவதில் இன்னொரு விசேஷமும் இருக்கிறது. படைப்பதற்கு முன்னர் அது வெறும் உணவாகிறது. படைத்த பின்னர் பிரசாதம் எனப் பெயர் பெறுகிறது. இறைவனுக்கு எம்மால் வழங்கப்பட்ட உணவை, இறைவன் மனதார ஏற்றுக் கொள்கிறார், என்ற இனிய நம்பிக்கைதான் அதற்குப் பிரசாதம் என்ற பெயர் வரக்காரணமாகிறது.

பிரசாதத்தை எவரும் தனியாக அமர்ந்து வயிறு புடைக்க உண்பதில்லை. நைவேத்தியம் செய்தவர், பிரசாதத்தைப் பலருக்குப் பங்கிட்டுக் கொடுத்து, அவர்களை திருப்தியுற வைத்துத் தானும் திருப்தி காண்கிறார். இது பிறருக்குக் கொடுத்து உண்ண வேண்டும் என்ற பண்பைத் தூண்டுகிறது. தனக்குக் கிடைக்கக்கூடிய இறையருள், எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்ற பரந்த சிந்தனையை வளர்க்கிறது. இவற்றால் சமூக உறவு வளர்ச்சியுறுகின்றது.

இதே போன்று தான், மலர்கள் இட்டு வழிபாடு செய்வதும். மலர்களை இறைவனின் பாதக் கமலங்களில் தூவுவதன் மூலம் அன்பை வெளிப்படுத்துகிறோம். இயற்கையில் எங்களால் பெறக்கூடிய அழகான பொருளான மலரை இறைவனுக்கு அர்ப்பணிப்பதன் மூலம், அவரை அழகு செய்து பார்க்க ஆசைப்படுகின்றோம். இந்த மனித குலத்தின் ஜீவநாடி, அழகுணர்ச்சி தான், இன்று வரை உலகை வாழ்வித்துக் கொண்டிருக்கிறது. என்பது ஆழ்ந்து நோக்கின் புலனாகும்.

**நைவேத்தியம் அன்பின் வெளிப்பாடு மலர்கள் அழகுணர்வின் வெளிப்பாடு என்றால் பச்சிலைகள் போட்டு இறைவனை அர்ச்சிப்பதன் நோக்கம் என்ன?**

பச்சை இலைகளை போட்டு இறைவனை அர்ச்சிப்பது ஆரோக்கியத்தின் வெளிப்பாடு, நாங்கள் இந்து சமயத்துக்குள் எவ்வளவு ஆழமாக உட்புக நினைக்கிறோமோ அவ்வளவுக்கு தத்துவங்களின் ஆழ்ந்த கருத்துக்கள் புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுள் வேதம், சித்த மருத்துவம் என்பது இந்து மத ஞானியரால் தோற்றுவிக்கப்பட்டு, இன்றைய நவீன காலத்திலும் சிறப்பாகச் செயல்பட்டு வரும் இரு பெரிய மருத்துவத்துறைகள் என்பதை நாம் மறந்து விடலாகாது. மனிதருக்கு உருவாகக் கூடிய நோய்களை இனங்கண்டு, இயற்கையிற் கிடைக்கும் மூலிகைகளைப் பயன்படுத்தி, நோய்களைக் குணமாக்குவதே இதன் சிறப்பு. இயற்கையோடிணைந்து போவதால், இன்றைய மருத்துவ உலகில் பக்கவிளைவுகள் - பின் விளைவுகள் அற்ற மருத்துவமாக இது பேணப்பட்டு வருகிறது. இனி விஷயத்துக்கு வருவோம் சிவன் சூரியனைத் தனக்குள் கொண்ட கடவுள். வெம்மை இவரது தன்மை. முப்புரம் எரித்தமை, காமனை எரித்தமை, முருகக் கடவுளைத் தோற்றுவிப்பதற்கு நெற்றிக்கண்ணிலிருந்து நெருப்பை உதிர்த்தமை. ஆகியன இவரது திருவிளையாடல்களாகப் போற்றுவதும், இக்கருத்தின் அடிப்படையில் தான்.

வில்வம் இலையோ குளிர்ந்த தன்மை உடையது. இதன் சாறு எந்த உஷ்ண நோய்களுக்கும் சிறந்த மருந்தாகிறது. வெம்மையில் உருவான சிவனை, வில்வம் இலை கொண்டு அர்ச்சித்தால் சமநிலை பேணப்படுகிறது. வெம்மைக்குச் சிறந்த இயற்கைச் சமநிலை வில்வம் இலையாகும்.

அதேபோல் திருமாலை எடுத்துக் கொண்டால் அவர் நீரின்மேல் படுப்பவர். விஷப்பாம்பின் நிழலில் துயில்பவர். குளிருக்கும் விஷத்துக்கும் இடையில் வாழும் இவருக்கு இரண்டுக்குமான மாற்றீடு துளசி இலை மூலம் பேணப்படுகிறது. சளி, இருமல் போன்ற குளிர் காரணமாக ஏற்படும் உபாதைகளுக்கு துளசி இலைச்சாறு சிறந்த மருந்தாகும். அது போல், துளசி விஷத்தையும் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது. துளசி உள்ள இடங்களில் பாம்பு போன்ற விஷஜந்துக்கள் வர விரும்புவதில்லை என்பதையும் இங்கு நோக்க வேண்டும். இதனால் தான் கிருஷ்ணருக்கு துளசி பிடித்தமானது எனக் கூறப்படுகிறது. பிருந்தாவனம் எனப்படுகின்ற துளசிச்செடிகள் நிறைந்த இடம் தான் கிருஷ்ணருக்கு மிகவும் விருப்பமான விளையாட்டுத்திடல் என்பது கவனிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாருக்கு அறுகம்புல் விருப்பமானது எனக் கூறப்படுகிறது. அறுகம்புல் சாறு, இன்றைய உலகில் "கொலஸ்ரோல்" என்று நாகரிகமாகக் கூறப்படும் கொழுப்பைக் குறைக்க வல்லது. இது எல்லோருக்கும் நன்கு தெரிந்த உண்மை. பிள்ளையாரைப் பாருங்கள். அவரைப்போல் பருமன் உள்ளமனிதர்களைக் காணும் போது, கொலஸ்ரோல் உள்ளவர் என்று தானே பொதுவாகக் கருதுகிறோம். கணபதிக்கு அறுகம்புல் உவப்பாக இருப்பது உடலாரோக்கியம் கருதியே என்பதை உணர்ந்து கொண்டால், நம்முன்னோரின் அறிவுக் கூர்மை புலனாகும்.

தேகாப்பியாசத்தை எடுத்துக் கொள்வோம். இன்று உலகமெங்கும் பரவிக்கிடக்கின்ற யோகாசனம், தியானம் என்பவை இந்து சமயப் பெரியோர்களின் கண்டுபிடிப்பே என்பதில் நாம் பெருமை கொள்ளலாம். இவற்றுக்கு சாதாரண உணவு வகைகளே போதுமானவை. சிறிய இடம் போதுமானது. எவ்வித உபகரணங்களும் வேண்டியதில்லை. ஆனால் யோகாசனம், தியானம் என்பவற்றின் பலனோ அளப்பரியது.

யோகாப்பியாசம் செய்யும் ஒருவருக்கு நோய்கள் ஏற்படுவது மிகமிகக் குறைவு. உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆரோக்கியம் தருகின்ற வல்லமை, யோகாசனத்துக்கும் தியானத்திற்கும் உண்டு. இத்தகைய சிறப்புக்களை பல நூற்றாண்டுக்கு முன்னரேயே அறிந்து, ஆன்மபலம் உடனலம் மனநலம் என்பவற்றை வளர்த்தவர்கள், எமது ரிஷிகள் என்பதை மறந்து விடலாகாது.

**ஆன்மநேய ஒருமைப்பாடு பற்றி பேசும் எமது மதத்தில் மிருகங்களைப் பலியிடும் வழக்கம் எவ்வாறு தோன்றியது? இதன் பொருள் என்ன?**

இந்துமதம் பரந்த சிந்தனையின் ஊற்றாகும். வழிபாட்டு முறையிலோ வேறு விஷயங்களிலோ இறுக்கமான கட்டுப்பாடுகள் எதையும் எவருக்கும் விதிக்கவில்லை. அடிப்படை விதிகளை வகுத்து வைத்திருக்கின்ற அதே நேரத்தில், உலகநடைமுறைக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தனின் இயல்புக்கும் ஏற்படும் நெகிழ்ச்சித் தன்மையையும் அது அனுமதித்து, ஏற்றுக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, கண்ணப்பநாயனார் இறைவனுக்கு வாயிலிட்டுச் சுவை பார்த்த இறைச்சியைப் படைத்த செயலைக் குறிப்பிடலாம். இங்கே கண்ணப்பர் இறைவன் மேல் கொண்ட அன்பின் முன், ஆசார நடைமுறைகள் செயலிழந்து போகின்றன. ஆனால், அதற்காக நாமும் இறைச்சி படைத்தால் என்ன என்று நினைப்பது பக்தியின் பாற்படாது. விதண்டா வாதத்தின் வகைப்பட்டு அகங்காரத்தில் வந்து நிற்கும். இந்த விஷயத்தை விளங்கிக் கொள்வதன் மூலம் மிருகங்களைப் பலியிடுவதன் தன்மையும் ஓரளவு விளங்கிக் கொள்ள இயலும்.

மனித மனத்துள் ஏராளமான விலங்குகளும், பறவைகளும் குடிக்கொண்டு இருக்கின்றன. மற்றவரைக் கபடத்தால் வீழ்த்தும் போது நம்முள் நரி தலையெடுக்கிறது. பிறர் பொருட்களைக் கவரும் போது, காகம் பறக்கிறது. பிறருடைய நல்ல குணங்களை ஒதுக்கிவிட்டுக் கூடாக்குணங்களைச் சுவை பட நாம் அலசும் போது காகம் கழிவுகளில் சுகம் காண்பது போல், நாமும் சுகம் காண்கிறோம். பிறரைத் தாக்கும் போது சிங்கமாகவும், புலியாகவும் சிந்தனைகள் நிலையற்றுத் தாவும் போது குரங்காகவும் எண்ணங்களைத் தூர இடங்களுக்கு அலைய விடுவதன் மூலம் பறவையாகவும், நாம் செயல்படுகிறோம். இவ்வாறெனின் நாம் மனிதராக செயல்படுவது எப்போது?

இதனால் தான் எங்களிடம் உள்ள மிருகங்களை பலியிட வேண்டும் என்றும், நல்ல மனிதனாக வாழத் தடையாக அமைந்திருக்கும் கட்டுக்களை - விலங்குகளை - பலியிட வேண்டும் என்றும், இந்து மதம் கூறுகிறது. ஆனால் இந்த விளக்கத்துக்குத் தவறாகப் பொருள் கொண்டவர்கள் சிலரால், உண்மையாகவே மிருகங்களைப் பலியிடும் நடைமுறை உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இதனால், மனிதனில் தங்கி வாழ்கின்ற அப்பாவி ஜீவன்களான ஆடு, சேவல் என்பதை பலியிடப்படுகின்றன. மனிதன் சுதந்திரமானவன் என்ற இந்து மதத்தின் பரந்த கோட்பாடுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக, இத்தகைய நடைமுறைகளுக்கு எவராலும் இறுக்கமான எதிர் நடவடிக்கைகள் எடுக்க முடிவதில்லை. அவர்களாக உணர்ந்து நடைமுறைகளை மாற்றிக் கொள்வதற்கு வாய்ப்புக் கொடுப்பது மட்டும் தான் இன்று செய்ய கூடியதாகும்.

எனினும், ஒரு விடயத்தை நாம் அவதானிக்கலாம். மிருகங்களை பலியிடும் வழக்கம் கிராமிய மக்களிடையே தான் அதிகமாக காணப்படுகின்றன. பலி பெறும் தெய்வங்கள் கூட கிராமத்தேவதைகளாகவோ, அல்லது சிறு தெய்வங்களாகவோ தான் இருக்கின்றன. பெரிய ஆலயங்களிலோ சிவன், முருகன், கணபதி, விஷ்ணு கோயில் கொண்டருளும் சிறு ஆலயங்களிலோ கூட மிருகங்களை பலியிடும் வழக்கம் இருப்பதில்லை. இதிலிருந்தே பிழையான பொருள் கொள்ளலால் தான் சிறு தெய்வ ஆலயங்களில் மிருகங்கள் பலியாகின்றன என்பது தெரியும்.

ஆகம விதிப்படி அமைந்த ஆலயங்களில் எல்லாம் கொடி மரத்தையடுத்துப் பலிபீடம் அமைக்கப்பட்டிருக்கும். இதன் அர்த்தம், ஆகக் குறைந்தது இறைவன் சந்நிதானத்துக்கு வரும் போதாகிலும் எங்களுடைய உய்வுக்குத் தடையான தளைகளை - விலங்குகளை - மனதில் தோன்றும் மிருக எண்ணங்களை நாம் பலிகொடுத்து இறைவனின் அன்பைப் பெற வேண்டும் என்பது தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருகரம் கூப்புகிறோம்

எங்கள் இதயதெய்வம் மறைந்த செய்தி கேட்டு, ஓடோடி வந்து உதவியோருக்கும், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும், துயர் பகிர்ந்து வருந்தியோருக்கும், இன்றைய அந்தியேட்டி நிகழ்வில் கலந்து சிறப்பித் தோருக்கும், வேறு வழிகளில் துணை புரிந்தோருக்கும் இரு கரம் கூப்பி மனம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நன்றியுடன்**
**குடும்பத்தினர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

❖நாகமணி + ❖முத்தாச்சி

ம் ❖பரமசாமி

❖இராசரட்ணம் ❖நாகரட்ணம் செல்லம்மா பவளக்கொடி சபாரட்ணம்

நிர்மலா
+
அருந்தவரட்ணம்
↓
அபிராமி
அரவிந்தன்
அசோக்

சீதா
+
தவராஜ்
↓
லக்சிதா
பிருந்திகா
கிருத்திகா

சத்தியலிங்கம்
+
வாசுகி
↓
பவன்
பாரதி

லதா
+
மணிவண்ணன்
↓
சௌமியா
சைத்தன்யன்
ஸ்ரீராம்

❖ அமரர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகிறது.



இந்த மாற்றம் உலக நியதியாகும்.
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

தமிழ்ப்பூங்கா - 021 226 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org